பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர் 19 பங்குனி 18 ரபி ஆகிர் 10 இதழ்- 49
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-3-77

## மூதறிஞர் செல்வாவின் 80-வது பிறந்ததினம் இன்று

### அவர் சுகம் பெறவேண்டி ஆலயங்களில் ஆராதனை

யாழ்ப்பாணம், வியா

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 80-வது பிறந்ததினம் இன்றாகும்.

கடும் சுகவீனமுற்று யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் செல்வா விரைவில் பூரணசுகமும் நீடியவாழ்வு பெறவும் வேண்டி தமிழ்பேசும் மக்கள் இன்று ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மசூதிகளிலும் விசேஷ வழிபாடாற்றுவர்.

தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை மிகவிரிவான முறையில் கொண்டாடுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிட்டிருந்தபோதிலும், அவர் தெல்லிப்பழையிலுள்ள தமது இல்லத்தில் விழுந்து ஏற்பட்ட நிலைமையைத் தொடர்ந்து விழா ஏற்பாடுகள் கைவிடப்பட்டன. அததுடன் கூட்டணிச் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் செல்வாபிறந்த தினத்தில் அவர் சுகம்பெற வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு தமிழ்பேசும்மக்களுக்குப் பத்திரிகைகள் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

### தியேட்டர்களில் பக்திப்பாடல்கள்

செல்வா பிறந்ததினமான இன்று யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்களில் பக்திப்பாடல்கள் ஒலிபரப்பப்படும். நவீன சந்தை விளம்பரப்பகுதியும்

(7- ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலை நடத்த ஒழுங்கு

## ஆகஸ்டுக்கு முன் நடக்கும் தேர்தல் அதிகாரி அறிவிப்பு

சென்னை, மார்ச் 30

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் ராஷ்டிரபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக இத் தேர்தல் நடைபெறும் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. எஸ். பி. சிறினிவாசன் அறிவித்தார்.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் ஏற்பாடுகளுக்கு முன்னோடியாக வாக்காளர் இடாப்புகள் தயாரிக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 20-ம் திகதிக்கு முன்னதாக தேர்தல் இடாப்புகளில் பெயர்களைச் சேர்க்க வேண்டியவர்கள் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது: ஒரே நாளில் தேர்தலை நடத்த முடியும் என்றும் இதற்குரிய பொலிஸ் பந்தோஸ்து ஒழுங்குகளை செய்து தரமுடியும் என்றும் தமிழ்நாடு பொலிசார் கூறியுள்ளனர்.

ராஷ்டிரபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக இத் தேர்தல் நடாத்தப்படும் என்றும், ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்துக்கு முன்னர் இது நடைபெறும் என்றும் தேர்தல் அதிகாரி தெரிவித்தார். (ஆ)

## தமிழ்நாடு கவர்னர் சுக்கார்டியா மீது புகார்

சென்னை, மார்ச் 30

தமிழ்நாடு கவர்னராகப் பதவி வகித்தபோது திரு. மோகன்லால் சுக்கார்டியா காங்கிரஸ் கட்சிக்காகப் பாடுபட்டார் என்று உழைப்பாளர் பொதுநலக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

தமது கட்சியின் ஆதரவைக் பலவந்தமாகப் பெற்றுப் கொள்வதில் ஒப்பம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள மோகன்லால் சுகார்டியா முயன்றார் என்று இக் கட்சியின் தலைவர் கு. வி. இராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

காங்கிரசை ஆதரிப்பதாகக் கூறி உழைப்பாளர் பொது நலக்கட்சி அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும் என்று கவர்னர் மோகன்லால் சுக்கார்டியா வற்புறுத்தியதாக இக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ராஷ்டிரபதிஆட்சியில் உள்ள தமிழ் நாட்டில் கவர்னராக இருந்த மோகன்லால் சுக்கார்டியா புதிய அரசு வந்தது முதல் இப்பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (ஆ)

## வழமையான சேவைநடக்கிறது

யாழ்ப்பாணம், வியா.

கைதடியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலை வழமைபோல் இயங்கி வருகிறது. கைதடியில் அமைந்துள்ள ஆயுர்வேத திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்துக்கு முன்னால் நடைபெற்று வரும் சத்தியாக்கிரகத்திற்கும், வைத்தியசாலைக்கும் தொடர்பில்லை என்றும், வைத்தியசாலை வழமைபோல் செயற்படுவதாகவும், வைத்தியநிலையப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். ஏ. குஞ்சிதபாதம் தெரிவித்தார். (ஆ)

## வழமைபோல் ரயில்சேவை

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பு கோட்டையில் இருந்து செவ்வாய் இரவு புறப்பட்ட மெயில் புகையிரதம் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை நேற்றுக்காலை 8 மணியளவில் வந்தடைந்தது.

மாளிகாவத்தை புகையிரதக் குதவளவில் வேலைசெய்யும் புகையிரத ஊழியர்கள் ஒன்றரைமாத சம்பள முற்பணம் கோரி திடீர் வேலைநிறுத்தத்தில் நேற்றுக்குதித்ததையடுத்து நீண்டதூர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

(1-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்

### மத்திய நிதியமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி மார்ச், 30

புதிய அரசாங்கம் லஞ்சஊழலைப் பொறுத்துக் கொள்ள மாட்டாது என்று மத்திய நிதியமைச்சர் திரு. எச். எம். பட்டேல் கூறியிருக்கிறார்.

தி. மு. க.வுக்கு எதிராக முன்னைய அரசாங்கத்தால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து கமிஷன் ஒன்று விசாரணை நடத்தி வருவதாகவும், தி. மு. க. வுக்கு எதிராக சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் மிகவிரைவில் சட்டசபைத் தேர்தல் நடைபெறும் என்றும் அவர் கூறினார். ஜம்மு காஷ்மீரில் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் மாநிலசட்டசபை கலைக்கப்பட்டமை சட்ட பூர்வமானது என்றும் நிதியமைச்சர் குறிப்பிட்டார். இங்கு தேர்தல் நடைபெறுமென்றும் வாக்காளர்களை தேர்தலில் சந்திப்பதில் காங்கிரசார் பயப்பட வேண்டியதில்லையென்றும் அவர் கூறினார். (ஆ)

## யாழ்.பஸ் நிலையத்தில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் உள்ள தேநீர்சாலையில் கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாக நேற்று யாழ் நகரில் பேச்சடிபட்டது.

இது பற்றி பொலிசாரிடம் விசாரித்தபோது மதுபோதையில் நின்ற பிரயாணி ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகக் கூறினர். (ஆ)

## யாழ் மாவட்டத்தில் சிகரட் தட்டுப்பாடு ஏன்?

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணப் பகுதியில்கடந்த சில தினங்களாக சிகரெட்டுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சிலர் இதைப் பயன்படுத்தி அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கின்றனர். சிகரெட் தட்டுப்பாட்டுக்குப் பலரும் பலவித காரணங்களையும் சொல்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான சிகரட் விநியோகஸ்தர்களான யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் மானேஜிங் டைரக்டர் திரு. சி. கே. கந்தசாமியிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் பின்வருமாறு தெரிவித்தரர்.

சிகரட் உற்பத்தியாளர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் தேவையான சிகரட்டுகளை வழங்க முடியாமலுள்ளனர்.

எங்கள் கட்டுப் பணமாக ஒரு லட்சம் ரூபாய் சிகரட் கம்பனியிடம் இருக்கிறது. இதே நேரம்நாம்நமக்குதேவையான சிகரட்டுகளுக்கு அந்தந்த நேரம் பணம் செலுத்துகிறோம். நேற்று சிகரட்டுக்காக இரண்டு லட்சத்து முப்பத்தினாலாயிரம் ரூபாய் அனுப்பினோம். உற்பத்தியாளர்கள் ஒரு லட்சத்து ஐம்பத்திரெண்டாயிரம் ரூபாய்க்குத் தான் சிகரெட் தந்தார்கள்.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான சிகரெட்டில் பாதிக்கும் குறைவாகவே இப்பொழுது சிகரெட் வழங்கப்படுகிறது. இந்தநிலை நீடிக்காதென்றும் அடுத்த வாரத்தில் தட்டுப்பாடு நீங்கிவிடுமென்றும் எதிர் பார்க்கிறோம். பாவனையாளர்கள் நிலைமையைச் சமாளித்து எம்முடன் ஒத்துழைப்பார்களென்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## "இன்னும் 6 மாதத்தில் இந்திரா சவாலாக இருப்பார்"

(புதுடில்லி)

"இன்னும் ஆறுமாத காலத்தில் இந்திராகாந்தி வலிமை வாய்ந்த சக்தியாகத் திகழ்ந்து மொரார்ஜி தேசாயின் மத்திய அரசுக்கு சவாலாக விளங்குவார்" என்று இங்குள்ள லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை நிருபர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது:-

ஜனதா அரசுக்கு இந்திராவை ஆட்சி புரிவதென்பது அவ்வளவு எளிதாக இருக்காது என்று இங்குள்ள மேலைநாட்டு அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

அரசியலிலிருந்து இந்திரா காந்தி ஓய்வு பெறுவார் என்று எவரும் கருதவில்லை. இன்னும் 6 மாதத்தில் மீண்டும் முன்னணிக்கு வந்துவிடுவார். இந்த 6 மாத காலத்தில் கட்சியைச் சீரமைத்தபின் புதிய வலிமையுடன் புதிய மத்திய அரசுக்குச் சவாலாக விளங்குவார்."

மேற்கண்டவாறு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை நிருபர் கூறியுள்ளார்.

-தகவல்- நமது விசேஷ நிருபர்

# தம்பியின் கைகளை ஒருவர்

## கட்டிப்பிடிக்க மற்றவர் குத்தினார்

### சண்டிலிப்பாய் கொலை விசாரணையில் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

''சம்பவதினம் 3 எதிரிகளும் எனது கடைக்கு வந்து எனது தம்பியாருடன் தகராறுபட்டனர். தகராறு முற்றியதை யடுத்து முதலாம் எதிரி எனது தம்பியாரின் கைகளைக் கட்டிப் பிடிக்க 2-ம் எதிரி கூரிய ஆயுதமொன்றினால் குத்தினார். குத்து வாங்கிய எனது தம்பியார் குளறியபடி கடைப் பின்பக்கமாக ஓடினார்''

இவ்வாறு சண்டிலிப்பாய் கொலை குறித்து மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறும் மரணவிசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் சகோதரரான ஞானப்பிரகாசம் துரைசிங்கம் என்பவர் கூறினார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் குணபாலசிங்கம் என்பவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அவ்விடத்தைச் சேர்ந்த மாரிமுத்து யோகராசா, சைமன் யோகதாஸ், தவசி செல்லையா ஆகியோர் நீதிமன்றத்தில் சரண்புகுந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இக்கொலைச் சம்பவம் குறித்து மரணவிசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. காலமானவரின் சகோதரரான துரைசிங்கம் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சங்கானை சாந்திகபே உரிமையாளரான நான் அக்கபேயில் உனது சகோதரரான காலஞ்சென்ற குணபாலசிங்கத்தை உதவியாளராக வைத்திருந்தேன். சம்பவ தினம் இரவு 7-30 மணியளவில் கபேயில் நின்ற சமயம் 3 எதிரிகளும் கடைக்கு வந்தனர். 1-ம் எதிரி கபே வாசலுக்கு வந்து ''நீ சண்டியன் என்றால் வா வெளியே'', என எனது தம்பியாரைக் கேட்டார். தம்பியார் நான் சண்டியரல்ல. நீங்கள் போங்கள் எனக் கூறினார். 1-ம் எதிரி ஒருக்கால் அடிபடுவோம் எனக் கூறி வரவே காலமானவர் அவரைத் தள்ளிவிட்டார். 2-ம், 3-ம் எதிரிகள் கபே வாசலில் நின்றனர். 1-ம் எதிரி காலமானவருக்கு அடித்தார். காலமானவர் திருப்பி அடித்தார். அச்சமயம் 1-ம் எதிரி காலமானவரின் கைகளைக் கட்டிப்பிடிக்க 2-ம் எதிரி கூரிய ஆயுதமொன்றினால் அவருக்குக் குத்தினார். குத்தியவுடன் அவர் குழறிக்கொண்டு கபேயின் பின்பக்கமாக ஓடினார். 3-ம் எதிரி பார்த்துக் கொண்டு நின்றார்.

இதையடுத்து மரணவிசாரணையை திரு. டி. யேசுரத்தினம் ஒத்திவைத்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும் பொலிஸ் தரப்பில் சங்கானைப் பொலிசாரும் ஆஜராகி இருந்தனர்.

# லொறிக்காரர்கள்

## சங்கம் அமைத்தனர்

மாவிட்டபுரம், புதன்

யாழ். மாவட்ட லொறி உரிமையாளர்களை எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்காக லொறிப் போக்குவரத்தாளர் சங்கம் என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட லொறிக்காரர்களுக்குகாங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து வழங்குவதில் கடைப்பிடிக்கப்படும் அநீதியான நடைமுறையை எதிர்த்து உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும், மற்றும் லொறிக்காரர்களை எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத் தொழிற்சங்க ரீதியில் இலகுவாகத தீர்வு காண்பதற்காகவும் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில் இச்சங்கத்திற்கென புதிய காரியாலயமொன்று திறக்கப்பட்டு அக்காரியாலயத்தில் இச்சங்கம் இயங்க ஆரம்பித்துள்ளது ஏராளமான லொறிக்காரர்கள் இதுவரை அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளதாகவும், மேலும் யாழ். மாவட்டலொறிக்காரர்கள் அனைவரையும் இந்தச் சங்கத்தில் சேர்த்து பலம்வாய்ந்ததோர் அமைப்பாக இதனை ஆக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் சங்கச் செயலாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார். (அ)

## பற்றுக்குறையாம்

வேலணை, புதன்

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில்ஆசிரியர்பற்றுக்குறை நிலவிவருகின்றதெனப் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் யாழ். கல்வித்திணைக் களத்திற்கும் தொகுதிஎம்.பிக்கும் முறையிட்டுள்ளனர்.

சென்ற வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும் ஆசிரியர்களின் பற்றுக்குறை இருந்துவருவதால் மாணவர்களுக்கு தகுந்த கல்வி அறிவைக் கொடுக்க முடியாது இருந்துவருவதாகவும் புகாரில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. (உ)

## விறகில்லை

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறைத் தொகுதிக்கே ஒரு மத்திய அரசினர் விறகுசாலையாக விளங்கும் காங்கேசன்துறை அரசினர் விறகு சாலையில் போதிய விறகு இல்லாமையால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த பல்வேறு கிராம மக்கள்மட்டுமல்லாது சீமெந்து தொழிற்சாலை, பொலிஸ் நிலையம், ஆஸ்பத்திரிகள் போன்ற ஸ்தலங்களில் கடமைபுரிவதற்காக வெளியிடங்களிலிருந்து இங்குவந்து தங்கியுள்ள ஏராளமான மக்களும் விறகு பெறுவதற்கு இந்த விறகுசாலையையே எதிர்பார்த்திருக்கவேண்டியுள்ளது.

## அபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா,

யாழ். திருவண்ணை- கன்னொட்டி ஸ்ரீ காளியம்பாள் மகா குளிர்த்தி அபிஷேகம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறவிருக்கிறது.

பகல் 10 மணி முதல் 12 மணி வரை விசேஷ குளிர்த்தி அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். (உ)

# புங்குடுதீவில் மின்னொளி கரபந்தாட்டம்

வண்ணார்பண்ணை, புதன்

தீவுப்பகுதி ரீதியிலான மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்துவதற்குப் புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையம் ஏற்பாடுகள் செய்துள்ளது. நான்கு பேர் கொண்ட பழையமுறையில் (ஒவர்கேம்) நடைபெறும் இப்போட்டிகள் எதிர்வரும் 12-ம் திகதிபுங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையமைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இருபிரிவுகளாக நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில், இருபிட்டி சனசமூகநிலையம், புளியங்கடல் மகாமாரி சனசமூகநிலையம் செட்டிபுலம், ஊர்சாவற்றுறை பருத்தியடைப்பு ஆகிய சனசமூக நிலையங்களும், பத்து விளையாட்டுக் கழகங்களும் இருபிரிவுகளிலும் கலந்து கொள்ள விருக்கின்றன.

பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிகள் இரவுபத்துமணிவரை நடைபெற விருக்கின்றன. (அ)

# இத்தபால் பெட்டிகளில் தபால் சேகரிப்பதில்லையாம்

வவுணதீவு, புதன்

மட்டக்களப்பு பிரதமதபாலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நாவற்காடு உபதபாலகப்பிரிவுகளில் உள்ள தபாற்பெட்டிகளில் தபால் சேகரிப்பதில்லை என நீண்டகாலமாகப் புகார் செய்யப்பட்டு வருகின்றது. இது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலகம் எவ்வித நடவடிக்கையும் இதுகாலவரை மேற்கொள்ளவில்லையாம்.

கன்னன்குடாப் பகுதியில் உள்ள கரையாக்கன் தீவு, குறிஞ்சாமுனை ஆகிய பெட்டிகளிலும், கரவெட்டி, வவுணதீவு ஆகிய இடங்களிலுள்ள பெட்டிகளில் தபால் எடுப்பதற்கு ஆவன செய்வதுடன் வவுணதீவு சந்தியில் பழுதடைந்த நிலையில் உள்ள பெட்டியை திருத்தித்தருமாறும் அப்பகுதி விவசாயிகள்கோருகின்றார்கள்.

ஆயித்தியமலை, நாவற்காடு தபாலகங்களிலிருந்து தபால் விநியோகம், தொலைபேசிவசதி செய்துதரும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு விரைவில்ஆவன செய்வதாக மட்டக்களப்பு இரண்டாவது எம். பி.யும், மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. ராஜன் செல்வநாயகம் உறுதியளித்திருப்பதாக நாவற்காடுகிராமமுன்னேற்றச் சங்க செயலாளர் திரு. வ. குணரெத்தினம் தெரிவித்தார். (அ)

## உதைபந்தாட்ட சாம்பியன

நீர்வேலி, புதன்

உரும்பராய் புனித மிக்கேல் சனசமூகநிலையத்தின் 6-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்றுவந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கொக்குவில் நேதாஜி விளையாட்டுக்கழகமும் உரும்பராய் அண்ணாவிளையாட்டுக்கழகமும் மோதிய இவ்வாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழகம் 6-5 கோல்களால் வெற்றியீட்டி சுற்றுக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. திரு. எஸ். எம். எஸ். மார்ட்டின் மத்தியஸ்தம் வகித்தார். (அ)

## பேச்சு, நாடகம் போட்டிகள்

வரணி, புதன்

சாவகச்சேரி 'தென்னகத் தாரகை' தனது ஆறுவது ஆண்டுவிழாவின் நிறைவையொட்டி மாவட்ட ரீதியில் பேச்சுப்போட்டி,விளையாட்டுப் போட்டிகளை நடத்தவிருப்பதுடன் ஆண்டுவிழா மலரினையும்வெளியிடத்தீர்மானித்துள்ளது.இம்மலர் வெளியீடு அடுத்தமாதம் 10ம்திகதியளவில் நடைபெறும். (அ)

## அபிராமியந்தாதி விரிவுரை

சுழிபுரம், புதன்

மாசுகல் பாணவெட்டி அம்மன கோவிலில் தினமும் அபிராமியந்தாதி விரிவுரை ஆசிரியர் கேனு நடராசா வினால் நிகழ்த்தப்பட்டுவருகிறது. இவ்விரிவுரையையொட்டி மாதகல் இந்து இளைஞர் இயக்கத்தினர் அபிராமியந்தாதிப் பாடல்களைக்கொண்ட நூலையும் வெளியிட்டுள்ளனர். சுமார் தினமும் ஒன்றரை மணித்தியாலம் நடைபெறும் விரிவுரையை பன்னூற்றுக் கணக்கான மக்கள் பக்தியுடன் கேட்டுவருகின்றனர். பத்துத் தினங்கள் விரிவுரை தொடர்ந்து நடைபெறும். (அ)

## கி. அ. சங்க அங்குரார்ப்பணம்

வேலணை, புதன்

வேலணை கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் அடுத்த மாதம் 15ந் திகதி வேலணை உதவி அரசாங்க அதிபரின் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு. எம்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும். இக் கூட்டத்தில் வேலணை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. அ. விஜயநாதன், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் ஆகியோர் சிறப்புச்சொற்பொழிவாளர்களாகக்கலந்துகொள்ள விருக்கின்றனர். (உ)

## இடமாற்றம்

வரணி, புதன்

பச்சிலைப்பள்ளி தெங்குபனம் பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமை காரியாலயம் கண்டிவீதியிலிருந்து பளை புகையிரத வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய காரியாலயத்தை உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. வி. பாலசுந்தரம் திறந்து வைத்தார். (அ)


மலேஷியன் கை மார்க்

சாம்பிராணி

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

லிமிட்டெட்,

கொழும்பு-10

போன்: 24261—5.



## வரி விளம்பரம்

### தேவை

பாம்கோட் ஹோட்டலுக்கு உதவி மனேச்சர்/பண்டகசாலை பொறுப்பாளர் தேவை. வயது ஏறக்குறைய 45. பிணைப்பணம் ரூபா 2500/-. ஹோட்டல் அல்லது உணவு பரிமாறலில் முன் அனுபவமுள்ளவர்கள்சொந்தக் கையெழுத்தில், ஆங்கிலத்தில் எழுதி விண்ணப்பிக்கவும். ஓட்டோஸ் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5817

முலைத்தீவில்கடமையாற்ற பாதுகாப்பு சேவையாளர் உடனடியாகத் தேவை. New Maths ஆற்றல் இருப்பின் விரும்பத்தக்கது. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். ச. இராமலிங்கம், நிர்வாகி, 79, பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். 5820

### விற்பனைக்கு

தர்மக்கேணி பளையில் 6 ஏக்கர் புதிய தென்னம்பிள்ளைக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு தொடர்புகொள்ளவும். 29/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5819

### சோலைவரி அறிவித்தல்

நகரசபை
பருத்தித்துறை

நீங்கள் செலுத்தும் பணத்திற்கு உடனே பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும். வரியிறுப்பாளருக்கு பற்றுச்சீட்டு கொடுப்பதற்கு நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

மூ. ம. தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை, 29-3-77.
5821

### சோலைவரி அறிவித்தல்

நகரசபை
பருத்தித்துறை

1977ம் ஆண்டு முதலாம் கந்தாயச் சோலைவரிப்பணம் செலுத்தவேண்டிய திகதி 31-3-77லிருந்து 30-4-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இத்திகதிக்குப்பின் செலுத்தும் வரிப்பணத்திற்கு 10% பற்றுணைக்கட்டணம் அறவிடப்படுமென்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

மூ. ம. தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை, 29-3-77.
5822


## விற்பனை திணைக்களக்கிளை

வேலணை, புதன்

ஊர்காவற்றுறையில் சந்தைப்படுத்தும் விற்பனைத் திணைக்களத்தின் கிளையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் எடுத்துக்கொண்ட முயற்சியினால் மேற்படி திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் இவ்விடத்தை வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். வெகுவிரைவில் இக்கிளை நிறுவப்படும் எனகூறப்படுகிறது. (உ)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# காஷ்மீர் மாநிலத்தில் மூன்று மாதங்களில் சட்டசபை தேர்தல்

## லோகசபையில் உள்துறை அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச். 30 ஜம்மு காஷ்மீரில் மூன்று மாதங்களில் சட்டசபைத்தேர்தல் நடைபெறுமென்று பாரதஉள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அறிவித்தார்.

லோக்சபாவில் பேசிய அவர் ஜம்முகாஷ்மீரில் சட்டசபை கலைக்கப்பட்டதற்கான காரணம் 'அரசியல் நம்பிக்கை மோசடி' என்று கூறினர்.

ஜம்மு-காஷ்மீரில் ஷேக் அப்துல்லா தலைமையிலான அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்க காங்கிரஸ் கட்சி மறுத்ததையடுத்து முதலமைச்சர் ஷேக்கின் சிபார்சின்பேரில் மாநிலகவர்னரால் கலைக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

மக்கள் ஆதரவுஇருப்பதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியினர் தேர்தலை எதிர்நோக்க ஏன் பயப்படவேண்டும் என்று அமைச்சர் கேட்டார். ஜனநாயகத்துக்கு மாருக அரசு நடந்துகொண்டு விட்டதாக காங்கிரஸ்கட்சி கூறுவது வேடிக்கையாக இருக்கிறது என்று அவர் கூறினர்.

எல்லை மாநிலமான காஷ்மீர் போன்ற இடங்களில் குழப்ப நிலையை உருவாக்கமுயலவேண்டாமென்று பிரதமமந்திரிவிவாதத்தின் இடையில் பேசுகையில் கூறினர்.

சட்டசபையைக் கலைத்தது ஜனநாயக மரபுகளுக்கு மாறுனது எனக்கூறி காங்கிரஸ்உறுப்பினர் திரு. கான்சிங் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணை மீது விவாதம் நடந்தது. ஆகதரப்பு விளக்கத்தைத்தொடர்ந்து திரு. கரன்சிங் தமது பிரேரணையை விலக்கிக் கொண்டார்.

## ஜம்போஜெட் விபத்து: அதிர்ச்சித் தகவல்

லண்டன், மார்ச் 30 மேற்கு ஆபிரிக்காவுக்கு அருகே கடந்தவாரஇறுதியில் நடைபெற்ற விமானப் போக்குவரத்துச் சரித்திரத்திலேயே மிக மோசமான விமான விபத்து தொடர்பாக விசாரணை நடத்திவரும் குழு அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கே. எல். எம். விமான நிறுவனத்தின் டச்சு விமானம் கட்டுப்பாட்டு விதிகளை உதாசீனம் செய்து, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே புறப்பட்டுவிட்டது என்று இக்குழு கூறியுள்ளது.

இறுதிநேரம்வரை பொறுத்திருந்து இவ்விமானம் புறப்பட்டிருந்தால் இப்பயங்கர விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கனேரித் தீவுகளில் நடைபெற்ற இப்பயங்கர விபத்தில் 600 பேர் வரை மாண்டனர் என்பது தெரிந்ததே.

அமெரிக்காவைச் சேர்ந்த விமானமும் குறிப்பிட்ட விமானமும் ஒன்றேடொன்று மோதிக்கொண்டதனையடுத்து இவ்விபத்து சம்பவித்தது. (உ)

## நேபாள மன்னரும்ராணியும் குருவாயூரப்பன் தரிசனம்

புதுடில்லி, மார்ச் 30 நேபாள மன்னர் பிரேந்திராவும் ராணி ஐஸ்வரியாவும் தற்போது பாரதத்திற்கு விஜயம்செய்துள்ளனர்.

மன்னரும் ராணியும் நேற்று கோளாவுக்குச் சென்று குருவாயூரப்பனைத் தரிசித்தனர். இவர்கள் பாரதத்தின் பழமைமிக்க இடங்கள் பலவற்றையும் பார்வையிட்டனர். (உ)

## புதிய பாரதப் பிரதமருக்கு இடி அமின் வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 30 புதிய பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு உகண்டா ஜனதிபதி திரு. இடிஅமின் வாழ்த்துச்செய்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

''உங்கள் தலைமையிலான அரசாங்கம் பாரதத்தில் பதவியேற்றிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். எமது இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவும் ஒத்துழைப்பும் மேன்மேலும் வளரவேண்டும் என்பது என் விருப்பம்'' என்று ஜனதிபதி திரு. இடிஅமின் தமது வாழ்த்

(6-ம் பக்கம் பார்க்க)

## பீகாரிலும் பிரேரணை தோல்வி

புதுடில்லி,மார்ச் 30 பீகார் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

குஜராத் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

இரு மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சியே ஆட்சிநடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## புதிய அரசுக்கு இவர்களும் ஆதரவு

புதுடில்லி, மார்ச் 30 பாரதத்தின் புதிய அரசாங்கத்திற்கு மாக்ஸிஸட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குதனது பூரண ஒத்துழைப்பு உண்டு என்று இக்கட்சி அறிவித்துள்ளது.

போர்வொர்ட்புளக் கட்சியும் தமது ஆதரவு புதிய அரசாங்கத்திற்கு உண்டென்று ஏற்கனவே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பிரான்ஸ் மந்திரிசபை மாற்றத்திற்கான காரணம்

பாரிஸ், மார்ச் 30 பிரான்ஸின் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டதும் அதன் முக்கிய நோக்கம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்துவதுடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும் என்று பிரான்ஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு பிரான்சில் பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதால் ஆளும் கூட்டணி அதில் மீண்டும் மக்களாதரவைப் பெறும்பொருட்டே மேற்படி திட்டத்தை வகுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு பிரான்ஸ் மந்திரிசபை ராஜினமா செய்தது தெரிந்ததே. (உ)

## அமெரிக்க-சோவியத் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், மார்ச். 30 சோவியத்யூனியன் தலைவர்கள்வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிகோ தலைமையில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வான்ஸுடனும் ஏனைய அமெரிக்கத்தலைவர்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

இவர்கள் இருநாடுகளினதும் ஆயுதக்கட்டுப்பாடு பற்றி ஒரு முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை.

பேச்சுவார்த்தை விடயங்களை வெளியிட அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் மறுத்துவிட்டார்.

இருநாட்டுத் தலைவர்களும் மத்திய கிழக்குப் பிரச்னை குறித்து குறிப்பாக ஜெனிவா மாநாடு கூட்டப்படவேண்டியதன் அவசியம் குறித்து தமது பேச்சுவார்த்தைகளின் போது ஆராய்ந்திருக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகிருர்கள். (உ)

# தெ. ஆபிரிக்காமீது ஆதிக்கம் செலுத்தும் எண்ணமில்லை

## சோவியத் மறுப்பு

லண்டன், மார்ச் 30 தென்னுபிரிக்க நாடுகள்மீது சோவியத்யூனியன் ஆதிக்கம் செலுத்த முனைகிறது என்ற மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டை சோவியத்யூனியன் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

தற்போது ஆபிரிக்கநாடுகளில் விஜயம் மேற்கொண்டு வரும்சோவியத்யூனியன் ஜனதிபதி திரு.பொட்கோர்ணி தலைமையிலான அதிகாரிகள் இம்மறுப்பை வெளியிட்டுள்ளனர்.

தென்னுபிரிக்க நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்வதே சோவியத்யூனியனின் விருப்பம் என்றுகூறிய அதிகாரிகள், தென்னுபிரிக்கநாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் எண்ணம் தமது நாட்டுக்கு அறவே கிடையாது என்றனர்.

தமது ஆபிரிக்க விஜயத்தின் போது ஜனதிபதி திரு.பொட்கோர்ணி, ஆபிரிக்க நாடுகளுக்குத் தொடர்ந்து ஆயுத உதவியளிக்க தாம் தயார் என்று உறுதியளித்திருக்கிறுர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

## தச்சர் கண்டனம்

லண்டன், மார்ச் 30 பிரிட்டன் நிதியமைச்சர் திரு. ஹிலி சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி மாக்கிரெட் தச்சர் கண்டித்துள்ளார். (உ)

......

## பார்வையிட்டனர்

வேலணை, புதன் ஊர்காவற்றுறையில் பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் படகு கட்டும் திருத்தும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்குரிய இடத்தை வேலணை நிறைவேற்றுப்பொறியியலாளர் திரு. எம். சந்திரசேகரம், ஊர்காவற்றுறைப்பட்டினசபை உறுப்பினர் திரு. ஜேம்ஸ் சந்திரன், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர்.

கடற்கரையோரமாகஅமைக்கப்படவிருக்கும் இத்தொழிற்சாலையின் வேலைத்திட்டங்களை அங்கீகரிப்பதற்காக திட்டமிடல் அமைச்சுக்கு விபரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. (உ)

ருெடீஷிய விவகாரம்:

# பிரதமர் ஸ்மித் - தென்னுபிரிக்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை

## உள்நாட்டுத் தீர்வு ஏற்படுமா?

கேப்டவுன், மார்ச்30 ருெடீஷிய விவகாரம் குறித்து ருெடீஷியப் பிரதமர் திரு. இயன் ஸ்மித்தும் தென்னுபிரிக்கத்தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகின்றனர்.

இவ்விவகாரத்திற்கு உள்நாட்டுத் தீர்வு காண்பதுபற்றி பேச்சுவார்த்தைகளின் போது தீவிரகவனம் செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை தென்னுபிரிக்க அரசாங்கம் தனது பாதுகாப்புச்செலவினங்களை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ருெடீஷியாவில் திரு. இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளையர் அரசுக்கும் பெரும்பான்மை இனத்தவரான கறுப்பர் இனத் தேசியவாதத் தலைவர்களுக்கும்இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவிவருவது தெரிந்ததே.

பிரிட்டனைச்சேர்ந்த திரு. ஐவர் றிச்சேட் இவ்விவகாரத்தை சமரசமாகத் தீர்த்துவைக்கக்கூடிய ஜெனிவா மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு சமரசப் பேச்சுக்கள் முட்டுக்கட்டை நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தொடர்ந்து ஆதரவு

புதுடில்லி, மார்ச் 30 ஜனதா கட்சிச் செயலாளர் நாயகம் திரு. ராம்தான் தாம் தொடர்ந்தும் ஜனதா கட்சிக்கு ஆதரவளிக்கப்போவதாகவும், அரசாங்கத்துக்கு தமது ஒத்துழைப்பு என்றும் உண்டென்றும் அறிவித்துள்ளார்.

திரு. ராம்தான் தேர்தலையடுத்து ஜனதாகட்சியிலிருந்து ராஜினமாச் செய்திருந்தது தெரிந்ததே. (உ)

மணிவாக்கு

எவன் தன்னுடைய தாய் தந்தை முதலிய பந்துக்கள் வறுமையினுல் வருந்தும்போது இம்மையிலே புகழின் பொருட்டு அன்னியர்களுக்குத் தானங் கொடுக்கின்றனே அத்தானம் தருமமன்று.

—ஆறுமுகநாவலர்

ஈழநாடு
THE EELANADU

# தேயிலைக்கு ஏன் இந்தவிலை?

சீனியின் விலை சிறிது குறைந்ததனுலே பலதுறைகளிலும் சில நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

சீனியின் விலை மேலும் குறையலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவையெல்லாம் இனிப்பான செய்தி.

சீனி விலைகுறைந்தாலும் பல இடங்களிலும் எறின தேநீர் விலையும் இனிப்புப் பண்டங்களின் விலையும் இன்னும் இறங்குவதற்குத் தயங்குகின்றன, இதுமட்டுமல்ல உள்நாட்டில் உற்பத்தியாகும் தேயிலையின் விலை உச்சத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது.

இவை கசப்பானசெய்தி!

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களில் தேயிலையும் ஒன்று என்பது உண்மையே.

உலகச்சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல மவுசு உண்டு.

வெளிநாடுகளில் இலங்கைத் தேயிலைக்கு அதிக விலை கிடைத்தால் நமக்கு நல்லதுதான். இதனுல் அந்நியச்செலாவணி அதிகம் கிடைக்கும்.

ஆனுல் உள்நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருள் நாட்டுமக்களுக்கு குறைந்தவிலையில் தாராளமாகக் கிடைக்காமல் அந்நியச் செலாவணியைச்சம்பாதிப்பதற்காகஏற்றுமதிசெய்வதால் நாட்டுமக்களுக்கு என்னபயன்.

உள்நாட்டில் தேயிலையை மக்கள் பயன்படுத்தாத காலம் ஒன்றிருந்தது.

மக்கள் மத்தியில் அதன் பாவனையை அதிகரிப்பதற்காக இலங்கைத் தேயிலைப் பிரசாரசபையினர் தேநீர் தயாரித்து வீடுவீடாக இலவசமாக வழங்கிய காலமும் இருந்தது.

இன்று பாடுபடும் மக்கள் களைப்பைப் போக்கிக்கொள்ளவும், ஒருநேர உணவுக்குப் பதிலாக இரண்டுவேளை தேநீர் குடித்துப் பொழுதைக் கழிக்கவும் தேநீர் இன்றியமையாத உணவுப் பொருளாகிவிட்டது.

வெளிநாட்டில் நமது தேயிலைக்கு நல்ல கிராக்கி இருப்பதால் அதன்விலை அங்கு அதிகரித்துவருவது மகிழ்ச்சியளிக்கக் கூடியதே.

''தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும்'' என்பதுபோல நமது தேவைக்கு மேல்தான் வெளிநாட்டு வியாபாரமும் இருக்கவேண்டும்.

அந்நியச்செலாவணி சம்பாதிப்பதற்காக தேயிலையை ஏற்றுமதிசெய்யும் அதேநேரம் உள்நாட்டில் ஒரு குறிப்பிட்ட விலைக்கு மேற்படாமல் தேயிலை பாவனையாளருக்குக் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்வது மக்களின் தேவையைப் பூர்த்திசெய்து அவர்களுக்குத் திருப்தியை அளிக்க உதவும்.

சீனி விலைகுறைந்தும் தேநீர்விலைகுறையவில்லையே என்ற கேள்விக்கு சீனிவிலை குறைந்தால் என்ன தேயிலை விலை உயர்ந்துவிட்டதென்றல்லவா பதில் கிடைக்கிறது.

உள்நாட்டுத் தேவையை மறந்து வெளிநாட்டுச் செலாவணியை மட்டுமே கருத்தில்கொண்டால் இன்னும் சில வருடங்களில் தேயிலையை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

தெங்குப்பொருள்களைஏற்றுமதி செய்த நமது நாடு இப்போது புண்ணாக்குஇறக்குமதி செய்யவேண்டியநிலைக்கு வந்திருப்பதை மறந்துவிடக்கூடாது.

அந்நியசெலாவணி என்று என்னவெல்லாமோ ஏற்றுமதி செய்தோம்.

இதனுல் நாம் இப்போது காணும் பலன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட ஆடம்பரமோட்டார் கார்கள் வீதிகளில் நடமாடுவதுதான்!

தேயிலையானுலும் சரி வேறெந்தப்பொருள்களானுலும் உள்நாட்டில் உற்பத்தியாகும்பொருள்கள்குறைந்த விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு முதலில்வழி காணப்படவேண்டியது அவசியம்.

உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து உள்நாட்டில் மக்கள் நலிவதைவிட அந்நியச் செலாவணிக்காக அவைகளை ஏற்றுமதி செய்யாமலே விட்டுவிடலாமே!

# இன்று 80வது பிறந்ததினம்

# ஈழத்தமிழரின் தந்தை மூதறிஞர் செல்வநாயகம்

''நடுநடுங்கும் கைகால்கள்
நடுங்காக் கொள்கை.
நாவெடுத்துப் பேச முடியா
விட்டாலும்
சிடுசிடுப்பு இல்லாது சீராய்
நேராய்ச்
செந்தமிழர் வாழ்விற்கே
சேர்த்த சொற்கள்
அடுத்தடுத்து வருவதனை
அழகு ஈழம்
ஆர்வத்தோ டெதிர்பார்த்து
அதனைக் கேட்கும்
நடுநிலைமை தவருத
நல்லநோக்கு
நம்தமிழர் மூதறிஞர்
செல்வா நாக்கு
பஞ்சடைந்த இரு கண்கள்
ஆனுல் அந்தப்
பார்வைதான் தமிழ் மகனைப்
பலவானுக்கும்
வெஞ்சிறையுள் புகுதற்கும்
விறலை ஈனும்
வேகத்தை தீவிரத்தை
மேலும் கூட்டும்
அஞ்சாமை மந்திரத்தை
அகத்தில் ஓதும்
ஆயிரமாய்த் தியாகிகளை
ஆக்கப்போகும்
நஞ்சுகளை அமுதாக்கி
நமக்கு நல்கும்
நாற்பது லட்சம் தமிழர்
நாட்டை மீட்கும்''

என்று எளிய இனிய ஏற்ற மிக்க தமிழ்ச்சொற்கள் கொண்டு எம்தந்தை செல்வாவின் சிறப்பினைச் சீரினை தமிழ் ஈழத்தின் கிழக்கு மாகாணக் கவிஞன் அக்கரைச்சக்திவாழ்ததும் வாழ்த்துரை பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

## ''ஈழவேந்தன்''

கவிஞர் கூறுவதுபோல் நடுநடுங்கும் கைகால்களோடு ஒல்லிய குச்சிவடிவம்தாங்கி விரைந்து நாவெடுத்துப் பேசமுடியாத நிலையிலேதான் இன்று தந்தை செல்வா வாழ்ந்து கொண்டிருக்கிறர். இந்தநிலையில்தான் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த காந்தி அடிகளின் உருவமும், பகற்கனவு என்று கருதப்பட்ட பாகிஸ்தானைத் தோற்றுவித்த ஜின்னாவின்உடலும் இருந்தது. வேறுசொற்களில் விளம்பின் இறுதிக்காலத்தில் காந்தியடிகளின் உடலின் நிறை 95 றுத்தல்களாகும். முகம்மதுஅலி ஜின்னாவின் நிறை 70 இருத்தல்களாகும். ஊதிவிட்டால் வீழக்கூடிய ஒல்லிய வடிவம் தாங்கிய இவ்விரு பெருமக்களும் தமக்குள் மாறுபட்ட அரசியல் கொள்கை கொண்டிருந்த போதிலும் அவர்களிடம் குடிகொண்டிருந்த அரசியல் நேர்மை. உள்ள உறுதி காரணமாக நிலைநாட்டிய வெற்றிகள் உலகை வியப்பில் ஆழ்த்திய வெற்றிகளாகும். நம் தந்தை செல்வா அவர்களும் நடுநடுங்கும் உடல்தாங்கி நலிவுற்ற நிலையிலும் அவர் உள்ளத்திலும் குடிகொண்டுள்ள நடுங்காக்கொள்கை நற்றமிழ் இனத்தை வாழ்விப்பது உறுதி. தம் ஆன்மபலம்கொண்டே பல வெற்றிகளை உலகில் சான்றேர் நிலைநாட்டினர் என்று வரலாற்று ஏடுகளும் சாற்றுகின்றன. ஆகவே இன்றுடன் 79வயது நிறையப்பெற்றுள்ள தமிழரசுத் தந்தையும் தமிழ் இனத்திற்கு தம் வாழ்நாளிலே விடுதலை பெற்றுத் தருவார் என்று நாம் எண்ணுவதை வெறும் தவறென்று கூறமுடியாது.


### சாதிவெறியைச் சாடும் சான்றேன்

ஈழம்வாழ் தமிழ் இனத்திற்காக ஓயாது போராடிவரும் செல்வநாயகம் அவர்கள் தமிழ் இனம் தாம்விரும்பிய விடுதலையைப்பெறுவதற்கு முகற்படியாகத் தடிமைத் தூய்மைப்படுத்தி ஒற்றுமைக் குரல் எழுப்பவேண்டும் என்று கூறுவார். குறிப்பாக எம் செந்தமிழ் இனத்தைச் சீரழிக்கும் சாதிவெறியைச்சாட அவர் என்றும் தயங்கியதில்லை. சாதிப்பாகுபாடும் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்க முயலும் உயர் சாதியினர் போக்கும் எம்மை எங்கேகொண்டு தள்ளிவிடும் என்பதைப் பின்வரும் முறையில் அவர் உள்ளம்உருக எடுத்துரைக்கிறர். 'அரசியல் துறையில் தமிழ்மக்கள் இலங்கையில் அழிந்துபோகாமல் தப்பிப் பிழைப்பதற்கு சீவமரணப் போராட்டம் நடாத்திவருகிறர்கள். பெரும்பான்மைச்சமூகம் தங்களை அடக்கிஒடுக்கி வருவதாக தமிழ்ச்சமூகத்தினர் குரல் எழுப்புகிறர்கள். தமிழ்ச் சமூகத்துள் ஒருபிரிவினர் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும்வரையில் தமிழ்மக்கள் பெரும்பான்மையினருடைய அடக்குமுறையைத் தாம் முறியடித்து வெற்றிகாண்போம் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நம்முள் ஒருசாராரை நாமே இப்பொழுதும் அடக்கி மடக்கிவைத்திருக்கிறேம். இந்தக் குற்றச்காட்டுகளுக்கு ஆளாக இருக்கும்வரை எப்படி நமக்கு அரசியல் போராட்டத்தில்வெற்றிகிடைக்கும்'. செல்வநாயகம் அவர்களின் செம்மை உள்ளத்தினை அறிய இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறு என்ன இருக்கமுடியும்.

### தமிழ் ஈழத்தை ஒன்றுபடுத்தியவர்

சாதிவெறியைச்சாடியசெல்வநாயகம் அவர்கள் ஈழத் தமிழரிடை காணப்பட்ட தமிழ் இனத்தின் ஒற்றுமைக்கும் விடுதலை உணர்வுக்கும் ஊறுசெய்யும் மாகாண வெறியையும் தளர்த்தெறிந்த பெருமை தந்தை செல்வா அவர்களுக்கே உண்டு. வடக்கு, கிழக்கு.மலைநாடு, யாழ்ப்பாணம், வவுனியா. மன்னர், மட்டக்களப்பு, திருகோணமலை என்று தமக்குள் மாறுபட்டு, வேறுபட்டு, கூறுபட்டுக் கிடந்த தமிழினத்தை 'நாம் பேசும் மொழியால், கொண்டொழுகும் பண்பாட்டினுல் கடைபிடிக்கும் வாழ்க்கை நெறியினுல், நாம் ஒருவர் என்ற இன உணர்வினை இவரைப்போல் இவருக்கு முந்திய எந்த அரசியற் தலைவனும் ஏற்படுத்தியதில்லை. கிழக்கு மாகாணதின் குக்கிராமங்களிலும் மலையகத்தின் தோட்டப்பகுதிகளிலும் இவரைக் காண மக்கள் திரள்கின்ற தன்மையையும், கையெடுத்துக் கும்பிட்டு இவரின் காலில் விழுந்து வணங்குகின்ற காட்சியையும் நேரில் கண்டவன் என்ற முறையில் இவரைப்போல் வேறு ஒரு தலைவன் இப் பேற்றினைப் பெறவில்லை என்பதை யான்

(5-ம் பக்கம் பார்க்க)



## திருவருள் செய்குவாயே!

சந்ததம் தமிழின் சக்தி
தழைத்தெழத் தலைமை தாங்கிச்
சிந்தனைச் செயலார் மிக்க
செல்வநா யகமே யெங்கள்
தந்தையின் மயக்கம் நீங்கிச்
சக்தியே பெறுவ தற்குச்
செந்தமிழ் முருக நல்ல
திருவருள் செய்கு வாயே!

— அரியாலையூர் வே. ஐயாத்துரை

# ''நாடு சுதந்திரம் பெற்றும் நம் கலைகள் வளரவில்லை''

## நாட்டிய அரங்கேற்றவிழாவில் 'அமிர்'

பண்டத்தரிப்பு, புதன்

''பண்டைக்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலததில் தமிழ்க் கலைகள் யாவும் சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டன. இடைக்காலத்தில் அந்நியராட்சிக்காலத்தில் இக்கலைகள் நலிவுற்றன. நாடு சுதந்திரமடைந்த பிறகு தமிழகத்தில் இக்கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று மிளிரத் தொடங்கின. ஆனுல் நம் ஈழநாட்டில் சுதந்திரத்திற்குப் பின்பும் தமிழ்க் கலைகள் முறையான இடத்தைப் பெறத் தவறிவிட்டன. தமிழ் நாட்டில் நாட்டியக் கலை பயின்ற பல இலங்கையர்கள் இங்குவந்து பயிற்றுவித்துவந்த போதிலும் முறைப்படி வளர முடியவில்லை; இதற்கு முக்கிய காரணம் தமிழ்க் கலைகளைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளாத ஆட்சியினரும் அமைச்சர்களும்தான் என்றே கூற வேண்டியுள்ளது.''

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் கடந்த சனிக்கிழமை இரவு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற செல்வி சத்தியபாமா தம்பிப்பிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''பரதநாட்டியக் கலை தமிழ் மக்களின் தனிப்பெரும் சொத்தாகும். இறைவனையே நடனமாடவைதது உலக இயக்கத்தை ஏற்படுத்திய தனிச் சிறப்பை வேறு எங்கும் காண முடியாது. பரதநாட்டியக் கலை பணம் படைத்தவர்கள்மட்டும் பங்குபற்றும் கலையல்ல. பாமர மக்களும் அவற்றில் பங்குபற்றி தேர்ச்சி பெறவேண்டும். எமது பாரம்பரிய மிக்க முத்தமிழ்க் கலைகள் புத்துயிர்பெறவேண்டுமாயின் எமக்கென தனித் தமிழகம் அமைத்தல் அவசியம் என்பதை சகலரும் நன்கு உணரவேண்டும்.'' (அ)

# கூட்டணி-சுயாட்சி இணைப்பு ஞானமூர்த்தி சிந்திப்பாரா?

9-3-77 'ஈழநாடு' இதழில் ''திருவாதவூரன்'' எழுதியிருந்ததற்கு இதுவரை திரு. ஞானமூர்த்தியிடம் இருந்தோ, கூட்டணியினரிடம் இருந்தோ எதுவித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. அதிலிருந்து, தமிழர் கூட்டணியினர் சுயாட்சிக் கழகத்தை நெருக்கித் தள்ளிவிட்டு' ஒன்றுபட வாருங்கள் என வெறும் ஒப்பனைக்கு மேடைகளிலும் பத்திரிகைகளிலும் ஓலமிட்டு ஒப்பாரிவைக்கிறார்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது.

## எதிர்வரும் பொதுத் தேர்தல்

வருகிற பொதுத் தேர்தலைத் 'தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பமாகவும் அதனைத் தெரிவுபடுத்தும் பொதுசன வாக்கெடுப்பாகவும் உபயோகிக்கவேண்டும் என்றும், தேர்தல் விஞ்ஞாபனத்திலே நமது இலட்சியத்தையும் நோக்கத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக இயங்கப்போகிறோம் என்பதையும் வெளிப்படுத்தவேண்டும் என்றும், இந்த உறுதிமொழி தரும் அபேட்சகர்கள் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்படுவார்களானல், உடனடியாக அரசமைப்பு நிர்ணயசபையாக தம்முள் தாமே கூடி, சுதந்திர தமிழ் இலங்கையைப் பிரகடனப்படுத்தவேண்டும் என்றும் அந்த ஆட்சிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்ற வழிவகைகளை அமைத்து இயங்கவேண்டும் என்றும் இதனை நிறைவேற்றுதற்கு விடுதலை வேட்கை கொண்ட சகல தமிழ்க் கட்சிகளும் இயக்கங்களும் ஒருங்கு சேர்ந்து செயல்படவேண்டும் என்றும் சுயாட்சிக் கழகம் 21-8-76 ல் நிறைவேற்றிய தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அனுப்பி, அபிப்பிராயங்களை, கருத்துக்களைக் கோரியிருந்தது. அத்தீர்மானததை ஆராய்ந்து எதுவித கருத்தும் கூருமல், ஒற்றுமை, கட்டுப்பாடுபற்றி இதோப தேசம்மட்டும் செய்து, ஒற்றுமைகட்டுப்பாட்டுடன்நடக்க முடியுமென உத்தரவாதமளிக்

**க. பத்மநாதன்**

கும் நிபந்தனையோடு தம்முடன் வந்து சேருமாறு 28-9-76 ல் தமிழர் கூட்டணி சுயாட்சிக் கழகத்திற்குப் பதில் அனுப்பியது. சுயாட்சிக் கழகத்தினருக்கு ஒற்றுமை கட்டுப்பாடு என்ருல் என்னவென்றே தெரியாது என்று மறைமுகமாக நையாண்டி செய்வதுடன், கூட்டணியில் கழகத்தை நுழைய விடாமல் தடுக்கும் நோக்கம் கொண்டதாகவும் இந்தப் பதில் காணப்படுகிறது.

### தனித்தமிழ் நாடு

தனித்தமிழ் நாட்டுக் கொள்கையை திரு. நவரத்தினமும் வலியுறுத்துகிருர்; திரு.செல்வநாயகமும் வலியுறுத்துகிருர். ஒத்த கொள்கையுடைய நவரத்தினம் கூட்டணியில் சேருவதற்கு 'கட்டுப்பாடு-ஒற்றுமை' என்ற முள்வேலியைக் குறுக்கே போடுகிருர்கள்.

### ஞானமூர்த்தி சிந்திக்கவேண்டும்

திரு. ஞானமூர்த்தி இவைபற்றிச் சிந்திக்கவேண்டும். தமிழரசுக் கட்சிபற்றியும், சுயாட்சிக் கழகம்பற்றியும் உள்ளும் புறமும் நன்ருகத் தெரிந்த, தெளிந்த சிந்தனையும் சீரிய இலட்சியப்பற்றும், செயல் திறனும் படைத்த ஈழவேந்தனும் மற்றும் இளைஞர்களும் சிந்தித்து ஒற்றுமை காணும் பணியில் செயற்படவேண்டும்.

## விவாதமேடை

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கு முறையான அழைப்பை முதலில் அனுப்பவேண்டும்; கலந்து பேசி, கருத்துப் பரிமாறிச் சந்தேகங்களை நீக்கவேண்டும்.

கூட்டணியிலுள்ள கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி, இலட்சியங்களையும், இலட்சியங்களை அடைவதற்கான மார்க்கங்களையும், வழிமுறைகளையும், வேலைத்திட்டங்களையும் வகுத்துக்கொண்டு அவற்றை வழுவாது கடைப்பிடித்துக் கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் செயற்படவேண்டும். மூளைத்திறன் படைத்த நவரத்தினத்தின்-தியாக சிந்தைகொண்ட கோமகவரன் போன்ற வாலிபரின் சேவையை தமிழினம் இழக்கக்கூடாது.

# ஈழத்தமிழரின் தந்தை—

(4-ம் பக்க தொடர்ச்சி)

அறுதியிட்டு உறுதியுடன் கூற முடியும்.

### தன்னடக்கத்தின் திருவுருவம்

தன்னைத் தமிழ்மக்கள் தம்மை உய்விக்கவந்த தமிழ்த் தெய்வமாக வழுத்தி வாழ்த்தியபோதும் எல்லைமீறிப் போற்றிப்புகழ்ந்தபோதும் அவரிடம் 'நான்' என்ற செருக்கு மருந்தளவும் குடிபுகுந்ததில்லை. ''பணியுமாம் பெருமை'' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு செல்வாவின் வாழ்வு. ''என்மீது நீங்கள் கொண்டுள்ள அன்புமிகுதியால் இங்கு என்னைப் பாராட்டிப் பேசினீர்கள். தனிப்பட்ட முறையில் நானே அன்றேல் வேறு ஒருவரும் புகழ்பெறத் தகுதியில்லை. தனிப்பட்ட எவரையும் நீங்கள் போற்றவேண்டாம். எமது கட்சியை-எமது இலட்சியத்தை நீங்கள் போற்றுங்கள், புகழுங்கள். அவை தான் நிலையானவை. தனிப்பட்ட எவரும் நிலையானவர் எனக்கூறமுடியாது'' என்று எம் மூதறிஞர் ஓரிடத்தில் குறித்துள்ள கருத்து எவ்வளவு தூரம் அவருக்கு கொள்கைப்பற்று உண்டென்பதையும் தனிமனிதன் வழிபாட்டை எவ்வளவிற்கு அவர் வெறுக்கிருர் என்பதையும் ஆழமாய் - ஆணித்தரமாய் எடுத்துக்காட்டுகிறது. தனி மனிதர்கள் தோன்றி மறையக்கூடும், நிலைதளும்பவும் கூடும். ஆகவே அவர்களை வழிபடுவதிலும் பார்க்க கொள்கை - கோட்பாட்டை உயர்நிலையில் வைத்துப் போற்றிப் பணிபுரிவதே எமக்குப் பயனளிக்கும் என்பது எமது செல்வாவின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

### மூன்கூட்டி உணரும் நுண்ணறிவு

மூதறிஞர் செல்வாவிடம் யாம் காணும் மற்றுமோர் தலைசிறந்த பண்பு தமிழ்இனத்திற்கு ஏற்படக்கூடிய பேரின்னல்களை இன்று நேற்றல்ல அன்றே மிக்க நுண்ணறிவுத் திறத்தோடு தீர்க்கதரிசன உணர்வோடு கூறிய அறிவுரைகள் - எச்சரிக்கைகளேயாகும். 1948-ம் ஆண்டிலேயே இன்று குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்தியத் தமிழரைத் தாக்கும் அரசாங்கம் நாளை மொழிச்சட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கு உலைவைக்கும் என்று கூறிய மொழிகளும் 1950ல் தற்போது தமிழ் இனத்தை சிங்கள இராச்சியமே ஆண்டுகொண்டிருப்பதுடன் தமிழ்இனத்தைப் பலவீனப்படுத்தவும் அது முயல்கிறது. உதாரணமாக உங்களது மாகாணத்திலே அரசாங்கத்தால் ஆரம்பித்துவைக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்தைப் பாருங்கள். அங்கே கூடிய சீக்கிரமே சிங்களவர்கள் குடியேற்றப்படுவார்கள். இது தமிழருக்கு நன்மைசெய்யவல்ல. அவர்களது உரிமைகளைப் பறிமுதல் ஆக்கவே தான்'' என்று கூறிய மொழிகளும் ஒரு உண்மை தீர்க்கதரிசியைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

### தீர்க்கதரிசி

முதலில் எம் கொடியுரிமையைப் பறித்த சிங்கள அரசாங்கம் பின்பு மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையை வாக்குரிமையைப்பறித்தது. அடுத்து எம் நில உரிமையை பறித்தது பின்பு எம் மொழி உரிமைக்கு உலைவைத்தது எம் உத்தியோக உரிமையை தட்டிப்பறித்த அரசாங்கம் இன்று எம் இளைஞர்களின் படிப்புரிமையையும் பாழாக்கிவிட்டது. மேற்குறித்த பறிபோன உரிமைகளை ஒழுங்குபடுத்தி நோக்குகையில் தந்தை செல்வா ஒரு தீர்க்கதரிசி என்பதை எவர்தான் மறுக்க முடியும். உள்ளம் தூய்மையுறும்போது சிந்தனையிலே தெளிவுஏற்படுகிறது. சிந்தனையில் தெளிவு இருக்கும்போது எடுத்துரைக்கும் துணிவு ஏற்படுகிறது. உள்ளத்தூய்மையோடு தெளிவோடு, துணிவோடு எடுத்துரைக்கும் கருத்துக்களை இன்றில்லாவிடினும் நாளை பணிவோடு உலகம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஆகவேதான் தந்தை செல்வாவின் செம்மை சான்ற கருத்துக்களை இன்றில்லாவிடினும் நாளையாவது அரசு ஏற்றேயாகவேண்டும் என்ற நம்பிக்கையுடன் நாம் வாழ்கிருேம்.

### இராமநாதனும் செல்வநாயகமும்

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலாது அஃதறிவிலாதவர்என்றும் ''அஞ்சுவது அஞ்சாமைபேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்'' என்று வள்ளுவர் எழுப்பிய குறளின் குரலுக்கு செவிமடுத்து வாழ்ந்த வாழும் இரு தலைவர்களை ஈழத்தமிழினம் பெற்றுள்ளது. ''Donoughmore means tamils no more [டொனமூர் எனின் இனிமேல் தமிழர் இல்லை] அன்று முழங்கிய இராமநாதன் அவர்கள் தன் தள்ளாதவயதிலும்தான் அச் சட்டத்தை நீண்டநேரம் எதிர்த்துப் பேசுவதற்கு பின் வரும் காரணத்தை எடுத்துக் கூறிஞர்.

(அவைத் தலைவர் அவர்களே யான் கூறவேண்டிய அனைத்தும் கூறிவிட்டேன் என்று நம்புகிறேன். இந்த முதிய வயதில் இப்படி நீண்டநேரம் பேசுவது எனக்கு மிக கடுமையான செயல். எப்படியாவது நிகழ்ச்சிகள் நடைபெறட்டும் நடப்பவை நடக்கட்டும்என்று கூறி யான் சும்மா இருக்கமுடியும். எனக்கு எளிதும்கூட. ஆனல் அவைத்தலைவர் அவர்களே அப்படி யான் வளர்க்கப்பட்டவன் அல்ல என்இறுதிமூச்சுவரையும் அட்டூழியங்களையும் பொய்மையையும்எதிர்த்துகுரல்எழுப்பத் தயங்கேன். இவ்விதம் நீண்ட நேரம் பேசுவதற்கு இதுவே காரணம் ஆங்கில உரையில் மொழியாக்கம் இது.) இவ்விதம் தமிழர் சார்பில் உரிமைக் குரல் எழுப்பிய இராமநாதனின் உரையை செவிமடுத்த திரு. கே.பி.எஸ். மேனன் (அவர் டொனமூர் சட்ட அமைப்பை வன்மையாக எதிர்த்து எமது கண்களைத் திறந்து சிந்தனையைக் கிளறி தன்னில் நிறைவெய்திய மக்களின் அறியாமையை சிறகடித்தபோது மேல் உலகத்தில் இருந்து எமக்கு வழிகாட்ட ஒரு தீர்க்கதரிசி வந்துள்ளார் என்று எண்ண இடம் கொடுத்தது) என்று மேற்குறித்தவாறு உள்ளம் உருக எடுத்துரைத்தார்.

அன்று தன் தள்ளாத வயதில் ''என் இறுதி மூச்சுவரையும் அட்டூழியங்களையும், பொய்மையையும் எதிர்த்துக் குரல் எழுப்பத் தயங்கேன்'' என்று சேர். பொன் இராமநாதன் தமிழர் சார்பில் இடிமுழங்கினர். இன்று எம்மிடையே ஏறக்குறைய அதேதள்ளாதவயதில்வாழ்ந்துகொண்டிருக்கும் தந்தை செல்வா அவர்கள் கொல்லின் சட்டம் எம்மைக்கொல்லும்சட்டம் என்று முழங்கி! இனிமேல் சிங்கள அரசாங்கங்களை நம்பிப்பயன் இல்லை. பேச்சு வார்த்தைகள் நடாத்தி, ஒப்பந்தங்கள்செய்து ஒத்துழைப்புவழங்கியும் பார்த்துவிட்டோம். இனி எமக்குள்ள ஒரேஒருவழி தமிழீழம் அமைப்பதே என்ருர். அவர் மேலும் கூறுவது யாதெனில் தனிநாடு அமைப்பது வில்லங்கமான காரியந்தான், ஆனல் தமிழ்இனம் தப்பிப்பிழைக்க வேண்டுமெனின் இதைவிட வேறு வழியில்லை எனகிருர்.

## எஸ். ஜே. வி.க்காக

வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் பெரியார் எஸ். ஜே. வி. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று மாலை 5-30 மணிக்கு சுவாமிக்கு விசேஷ பூசை நடைபெறும். தலைவர் பூரண குணமடைய, திருநீற்றுப்பதிகத்தையும் இடர் களையும் பதிகத்தையும் இருப்பூங்குடி ஆறுமுகம் அவர்கள் ஓதுவார்கள்.

# நயினை அம்பாளை பிரி.தூதர் தரிசித்தார்

வேலணை, புதன்

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் நயினதீவுக்கு விஜயம் செய்தபோது அவருக்கு நயினதீவு வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் வரவேற்பளித்து கௌரவித்தது.

நயினதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையிலும் அவர் கலந்து கொண்டார். அவருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ. எல்.விஜயபாலாவும் வந்திருந்தார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் அவர்களை வரவேற்ருர்.

திரு. டேவிட் காரைநகர் சீநோர் நிறுவனத்திற்கும் விஜயம் செய்தார். (உ)

# ''திரிசங்கு நிலையில் கனிஷ்ட அதிபர்கள்''

யாழ்ப்பாணம், வியாழன்

''ஐந்து தரங்களில் அதிபர்களையுண்டாக்கி அதில் 4ம்,5ம் தர அதிபர்களைத் 'திரிசங்கு சொர்க்க' நிலையில் கல்விஅமைச்சு வைத்துள்ளது. இவ்வதிபர்கள் அடையும் அவமானம், தாழ்வுகள் அநேகம். நிர்வாகத்தில் ஏற்றத்தாழ்வு, சம்பள முரண்பாடு இப்படி எத்தனையோ தொல்லைகளுடன் இன்னலடைகின்றனர்.''

இவ்வாறு திரு. எஸ். செல்லத்துரை கனிஷ்ட வித்தியாலய அதிபர் சங்கத்தினை (4-ம் 5-ம் தர அதிபர்கள்) அங்குரார்ப்பணம் செய்துவைக்கும்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பாரதிபாஷா வித்தியாசாலை மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது. நூற்றுக்கதிமான அதிபர்கள் பங்குகொண்ட இக் கூட்டத்தில் தலைவர் தொடர்ந்து பேசுகையில் ''எமது கனிஷ்ட வித்தியாலய அதிபர் சங்கம் எந்தச் சங்கத்திற்கும் எதிரானதல்ல. அதிபர்கள் உரிமையைப் பெறவும், வென்றெடுக்கவும் உண்டாக்கப்பட்டதே இச்சங்கம்'' எனக் குறிப்பிட்டார்.

செயலாளர் திரு. சி. நவரத்தினம் வரவேற்புரை நிகழ்த்திஞர். திரு. வே. க. கந்தசாமி அமைப்பு விதிகளைச் சமர்ப்பித்தார். (அ)

## கரும்புச்செய்கை

கொழும்பு, புதன்

உடவளவைப் பகுதியில் மேலும்20,000ஏக்கரில் கரும்பு செய்கை பண்ணப்படவிருக்கிறது. (உ)

......

## வேள்வி விழா

கரவெட்டி, புதன்

புலோலிமேற்கு சொக்கன் கலட்டி முத்துமாரி அம்மன் வேள்வி விழா அடுத்த மாதம் 5-ம் தேதி பிற்பகல் ஆரம்பமாகி 6-ம் தேதி புதன் கிழமை காலைவரை நடைபெறும். கரகம், காவடி, பாற்செம்பு ஆகியனவும் பொங்கல் நிகழ்ச்சியும் வழமைபோல் நடைபெறவிருக்கின்றன. (அ)

## 'ஒற்றுமையில் வெற்றி கண்டவர்'

புங்குடுதீவு, புதன்

மூதறிஞர் செல்வநாயகம் நீடித்து வாழவேண்டுமென்பதற்காக பிரார்த்தனையும் வழிபாடும் விசேட பூசையும் புங்குடுதீவு வல்லன் நாகதம்பிரான் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளின்போது ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ்இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'தந்தை செல்வா ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தினதும் தலைவன் என்ற உணர்வுடனேயே இன்று நாம் வேண்டுதல் செய்கிறோம். தமிழர்கள் ஒருகுடும்பம் என்ற உணர்வை ஏற்படுத்துவதில் வெற்றிகண்ட இடையுறு உழைப்பாளி தந்தைஅவர் எப்பதிலும் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

திருவாளர்கள் அ. சண்முகநாதன், நா.கணேசராசக்குருக்கள், கே. சர்வானந்தன், வே. சுப்பிரமணியம், பொ. நாகேசு, க. சோமாஸ்கந்தன், பேரவைத்தலைவர் திரு.அ.சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (அ)

இவ்வாண்டு

## உல்லாசப் பயணத்துறை வருவாய் அதிகரிக்கும்?

கொழும்பு, புதன்

உல்லாசப் பிரயாணத்துறை மூலம் இவ்வாண்டு 27 கோடி 60 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயமாற்றுகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு உல்லாசப் பிரயாணத்துறை மூலம் 23 கோடி 10 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயமாற்றுகக் கிடைத்துள்ளது.

இத்தகவல்களைச் சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்தஆண்டு 1 லட்சத்து 19,000 உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர். இவ்வாண்டு 1 லட்சத்து 52,000 பிரயாணிகள் இங்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அவர் சொன்னார். (உ)

# கரும்புச் செய்கைக்கு விவசாயக் காணிகள்

## சுவீகரிப்புக்கு ஆட்சேபம்

சாய்ந்தமருது, புதன்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விவசாயக் காணிகளை சீனிக் கூட்டுத்தாபனம், சுவீகரிக்கவிருப்பதற்குத் தமிழ், முஸ்லிம்கள் குழுவொன்று பிரதமரை நேரில் சந்தித்து ஆட்சேபம் தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

விக்கிளாமடு கண்டத்திலுள்ள பெருந்தொகையான விவசாயக் காணிகளை, கல்லோயா சீனித் தொழிற்சாலைக்கு கரும்பு பயிரிடுவதற்காக சீனிக் கூட்டுத்தாபனம், சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்துவருகிறது.

இரண்டரை வருடங்களுக்கு முன் இப்பகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் விவசாயக் காணிகள் பெரும் தொகையில் சுவீகரிக்கப்பட்டும், இதுவரை மாற்றுக் காணிகள் வழங்கப்படாததை, இக்குழுவினர் பிரதமரிடம் சுட்டிக் காட்டவிருக்கின்றனர்.

வரிப்பத்தான்சேனை, இறக்காமம், சம்மாந்துறை, கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். (க-அ)

## இல்லப் போட்டிகள்

வண்ணார்பண்ணை, புதன்

யாழ்-கொக்குவில் டாலிஸ்லே.க.த.பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இப்பாடசாலை மைதானத்தில் நடந்த இப்போட்டிகளுக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கு.சோமசுந்தரம் தலைமை வகித்தார். செட்டித் தெரு பாடசாலை அதிபர் திரு. முத்தையா பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்தார்.

பிரதம விருந்தினராக சட்டத்தரணியும், யாழ் லயன்ஸ் கழகத்தலைவருமான திரு. எஸ். மகேசன் கலந்து கொண்டார். திருமதி மகேசன் பரிசில்களை வழங்கினார்.

பாடசாலை அதிபர் திரு. நா. சோதிலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

பரிசுப் பொருட்களை யாழ். லயன்ஸ் கழகம் அன்பளிப்புச் செய்தது. (அ)

# இரவில் வீட்டுக்குள் புகுந்து சைக்கிள்செயினுல் தாக்கினர்

மாவிட்டபுரம், புதன்

இரவு நேரத்தில் திடீரென வீடொன்றினுள் புகுந்த மூவர் கொண்ட கோஷ்டி ஒன்று அவ் வீட்டுக்காரரைப் பலமாகத் தாக்கியபின் தப்பியோடிய சம்பவம் ஒன்று காங்கேசன்துறையில் இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை குருவீதியைச்சேர்ந்த இ. ஸ்ரீகாந்தன் என்னும் நபரே இவ்வாறுதிடீர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

மயிலிட்டி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் போர்மனுக்க் கடமைபுரியும் இவர் தமது வீட்டில் இருந்தசமயம் இரவு 7-30 மணியளவில் திடீரென அவர்வீட்டினுட்புகுந்த மூவர் சிங்களத்தால் ஏதோ கூறிக் கொண்டு சைக்கிள் செயின்களால் அவரைப் பலமாகத்தாக்கினார்களாம். அவரது மனைவி சத்தம்போட்டுக் குளறியதையடுத்து அவர்கள் தப்பியோடிவிட்டனராம்.

இதுகுறித்து காங்கேசன் துறைப்பொலிசில் செய்து கொண்ட புகாரையடுத்து கான்ஸ்டபிள் திரு. பதுர்தீன் தீவிர விசாரணையிலீடுபட்டுள்ளார்.

## யாழ்-வளாகத்தில் பிரிட்டிஷ் ஸ்தானிகர்

யாழ்ப்பாணம்,வியா.

பிரித்தானிய ஸ்தானிகர் திரு. எயர்ஸ்நேற்றுயாழ்.வளாகத்துக்குச் சென்று வளாகத் தலைவர் பேராசிரியர் க.கைலாசபதியையும் ஏனைய பேராசிரியர்களையும் சந்தித்து உரையாடினார்.

வளாகத்திலுள்ள நூலகத்திற்குச் சென்று பார்வையிட்ட ஸ்தானிகர் அங்குள்ள பழைய நூல்களைச் செப்பனிட்டுப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒருவகை தாள்களை அன்பளிப்புச் செய்தார்.

முன்பு ஒரு முறை இங்கு விஜயம் செய்த ஸ்தானிகர் நூலகத்திலுள்ள பழைய நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை அறிந்து உதவுவதாக வாக்களித்திருந்ததாகத் தெரிகிறது.

# யாழ். கிரிக்கெட் கோஷ்டி இன்று கண்டி பயணம்

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே வருடாந்தம் நடாத்தப்படும் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்வதற்காக, யாழ். தெரிவுக் கிரிக்கெட்கோஷ்டி இன்று கண்டிக்குச் செல்கின்றது. எதிர்வரும் சனியும், ஞாயிறும் யாழ். தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டி கண்டி மாவட்டத் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியுடன், பேராதேனியா பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளது.

கண்டி செல்லும் யாழ். தெரிவுக் கோஷ்டியில், இலங்கை கிரிக்கெட் தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களான எஸ். இலங்கரட்ணம், ஸ்ரீதான் ஜெகநாதன், எஸ். ஏ. பெனடிக்ற், ஹரிகரன் ஜெகநாதன் ஆகியோர் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்களின் விபரம் பின்வருமாறு: ஜே. கனகநாயகம் (காப்டன்) எம். சுரேந்திரா, டாக்டர் எம். தெய்வேந்திரா, டொனல் கணேஷ்குமார், வி. சூரியக்குமார், கே. எம். சாந்திக்குமார், என். நவீனன், ஆர். நகுலேஸ்வரன், எம். எஸ். ரமேஸ், கே. எஸ். சாந்திகரன், ஆர். ரி. தேவபாலன், எஸ். நகுலேந்திரன்.

யாழ். தெரிவுக் கோஷ்டிக்கு தலைவராக திரு. பி. சிவபாதமும், உப-தலைவராக திரு. பி. ஜி. எஸ். டானியலும், யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கக் காரியதரிசி திரு. ஆர். செல்வரட்ணமும் செல்கின்றனர்.

## சென்ட்ரலை சென். ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், வியா

யாழ். மத்திய கல்லூரி-சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களிடையே நடைபெற்ற '40 ஓவர்' கிரிக்கேட் போட்டியில, சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி பழைய மாணவர் கோஷ்டி 33 ஓவர்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 171 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் காப்டன் கணேஷ்குமார் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், ஆர்.சச்சிதானந்தன் 31 ஓட்டங்களையும், ஜே. கனகநாயகம் 24 ஓட்டங்களையும் பெற்றனர். டாக்டர் தெய்வேந்திராவும், குலநாதனும் முறையே மூன்று விக்கெட்டுக்களை விழ்த்தினார்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டி, 39·4 ஓவர்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 172 ஓட்டங்களைப் பெற்றது. டாக்டர் எம். தெய்வேந்திரா 35 ஓட்டங்களையும்,வி. சின்னையா 31 ஓட்டங்களையும் பெற்றனர். டொனல் கணேஷ்குமார் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஆர். சச்சிதானந்தன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் விழ்த்தினார்கள்.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## பாடசாலைகள் ஹொக்கிப் போட்டி

யாழ்ப்பாணம், வியா

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே முதல் முறையாக 15-வயதுக்குட்பட்ட மாணவர்களின் ஹொக்கிச் சுற்றுப் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியன பங்குபற்றுகின்றன.

இந்தச் சுற்றுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ்ப்பாண பாடசாலை ஹொக்கிச் சங்கக் காரியதரிசி திரு. என். சோமசுந்தரம் மேற்கொண்டுள்ளார்.

## கரவெட்டியில் பிரார்த்தனை

கரவெட்டி, வியா.

மூதறிஞர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் உடல்நலனுக்காக கரவெட்டி கிழக்கு, அத்துளு கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று மாலை பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது. (அ)

## இன்று மெய்வல்லுநர் போட்டி

வேலணை, புதன்

ஊர்காவற்றுறை கல்விவட்டார மெய்வல்லுநர் போட்டி இன்று நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெறவிருக்கின்றது.

ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க.குகதாசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கம்பஹா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நடராசா, நெடுந்திவு கி. ச. தலைவர் திரு. த. அம்பலம் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (உ)

# வழிமறித்துப் பறித்தனராம்

## அடையாள அணிவகுப்பு நடந்தது

யாழ்ப்பாணம், வியாழன்

இருவரைத் தாக்கி அவர்களின் கைக்கடிகாரங்களை பறித்துச்சென்றதாக சந்தேகத்தின் பேரில் கைதானவர், நேற்று நடந்த அடையாள அணிவகுப்பில் ஒருவரினுல் அடையாளம் காட்டப்பட்டார்.

பதில் நீதிபதி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் அடையாளஅணிவகுப்பு நடைபெற்றது.

கடந்த மாதம் 22-ம் திகதி இரவு 8 மணியளவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிப்பகுதியில் எதிரி சிங்காபியதாசா, ரஞ்சித்ராஜ கருணு ஆகியோரை மூவர் வழிமறித்து அவர்களைத்தாக்கி கைக்கடிகாரங்களைப் பறித்து சென்றுர்கள் என பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது. இப்புகாரைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்து அடையாள அணிவகுப்பில் நிறுத்தினர்.

ரஞ்சித் ராஜகருணு என்பவர் சந்தேக நபரை அடையாளம் காட்டி, மூவரில் இவரும் ஒருவர் எனத்தெரிவித்தார்.

சந்தேக நபரான யோசப் ஆனந்தியை யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு பதில் நீதவான் திரு. பிரான்சிஸ் உத்தரவிட்டார். (க-ஆ)

வேலணை, புதன்

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் திருத்தியமைக்கப்பட்ட கட்டிடங்களை ஊர்காவற்றுறை எம். பி. டிண்டிதர் கா. பொ. இரத்தினம் ஏப்ரல் மாதம் 4-ம் திகதி திறந்துவைப்பார்.

பல்லாயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட இக் கட்டிடத் திறப்புவிழாவில் கல்விப்பகுதி அதிகாரிகளும்கலந்து கொள்வர். (உ)

# புளுக்கத்தைப் போக்க ஜன்னலைத்திறந்தார்கள்

## திருடர்கள் நுழைந்து கொள்ளை

கண்டி, புதன்

நள்ளிரவு நேரம் வீட்டுக்காரர்கள் புளுக்கம் காரணமாக படுக்கையறை யன்னலைத் திறந்து வைத்திருந்தபோது அதன் ஊடாக உள்ளே நுழைந்த திருடர்கள் மூன்று இரத்தினக்கற்கள் பதித்த பதினைந்து பவுண் நிறையுள்ள ஒரு தங்க நெக்லஸ் உட்பட பெறுமதி வாய்ந்த பொருட்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கண்டி பேராதனை வீதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

படுக்கையறை யன்னல் ஊடாக வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நள்ளிரவு 12 மணிக்கும் 1 மணிக்குமிடையில் மேற்படி நெக்லஸ் உட்பட விலையுயர்ந்த ஒரு கைக்கடிகாரம், ஒரு தங்கமோதிரம், ஒரு கறுப்புக் கண்ணுடி முதலான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கண்டிப் பொலிஸார் இத் திருட்டு தொடர்பான புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர். (உ)

சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு,
கொழும்பு-10.
போன்: 24261-5

## புதிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துச்செய்தியில் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. தேசாய்க்கு கனடா, யூகோஸ்லேவிய நாட்டுத் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். (உ)

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
**அன்னமிட்ட கை**

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
**தங்கத் தம்பி**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்) ஜெயலலிதா சுந்தரராஜன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** (JAFFNA)
Daily at 4-45 7-00 & 9-30 P. M.
**Steptoe & Son Ride Again**
(Color)

**ராஜா** [யாழ் நகர்]
சிவாஜி - முத்துராமன் சௌகார் ஜானகி - விஜயகுமாரி நடித்த
தினசரி 4 காட்சிகள்
**பார் மகளே பார்**

8-வது வெற்றி வாரம்!
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு ஈ. வி. சரோஜா, அசோகன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வீரத் திருமகன்**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
முத்துராமன் சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**லிடோ** போன்: 7693 [யாழ். நகர்]
கல்யாணகுமார் தேவிகா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
**நெஞ்சம் மறப்பதில்லை**
1-4-77 முதல் **கற்பகம்**

**ராணி** [யாழ்நகர்]
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த
இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
**நல்ல நேரம்**
(புத்தம் புதிய பிரதி)

**றியோ** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
அலெக்சாண்டர் டியூமாஸின் பிரபல்யமிக்க நாவல்
இப்பொழுது
எப்போதும் தயாரிக்கப்படாத அளவுக்குப்
பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள படம்
**THE COUNT OF MONTE-CRISTO**
சூழ்ச்சியாலும் சதியாலும்
காட்டிக்கொடுக்கப்பட்டுச் சிறைபிலிடப்பட்டு
உயிரோடு அடைக்கப்பட்டிருந்த
நிரபராதி ஒருவனின் கதை.
ஆனல் அவன் இறந்துவிட்டதாக உலகத்துக்கு
அறிவிக்கப்பட்டது.
டாண்டே சாதாரண மனிதன் அல்ல!
பழிக்குப் பழிவாங்க அவனுக்கு 23 ஆண்டுகள்
பிடித்தன. பழிக்குப் பழிவாங்கியே தீருகிருன்.
வரலாறிலேயே திரம் மிக்க செயல்.

பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ பிற்பகல்
1-30 காட்சி
(முன்னேற்பாடு செய்தல்வேண்டும்)
எல்லா வகுப்புகளுக்கும் ஒரே கட்டணமாக ரூ. 1-50
முகாமையாளருடன் தொடர்புகொள்க.
(ஒருசில நாட்களுக்கு மட்டும்)

# சமுதாய முன்னேற்றத்தில் ச.ச.நிலையங்களின் பங்கு

## வேலணையில் அரசாங்கஅதிபர் பேச்சு

வேலணை, புதன்

''சனசமூக நிலையங்கள் சமுதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்டு செயல்படவேண்டும்'' என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபால வேலணை மூன்றும் வட்டாரத்தில் நேதாஜி சனசமூக நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

நிலையத் தலைவர் திரு.கா. இராமு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''1940-ம் ஆண்டளவில் தான் சனசமூக நிலைய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அமரர் பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில்தான் இவ்வியக்கம் தீவிரத்துடன் செயற்படத் தொடங்கியது. சனசமூகநிலையங்கள் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தவேண்டும். முதியோர் பாடசாலை, சிறுவர் பாடசாலை ஆகியனவற்றை சனசமூக நிலையங்கள் ஆரம்பித்து நடாத்துதல் விரும்பத்தக்கது. விவசாய கைத்தொழில் பயிற்சிகளை மக்கள் பெறவும் சனசமூக நிலையங்கள் பணிபுரியலாம்.''

வேலணை கிராமசபைத் தலைவர் திரு. கே. சதாசிவம், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம், ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், தொழில் அதிபர் திரு. கே. கனகராசா உட்படப் பலரும் உரையாற்றினர். (உ)

## ஊரைதீவு கி. மு. சங்கம்

ஊரதீவு, புதன்

ஊரைதீவு கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 24-ந் திகதி பிற்பகல் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக தீவுப்பகுதி தெற்குக் கிராமஅபிவிருத்திஅதிகாரி திரு. அ. விஜயநாதன் கலந்துகொள்வார். (அ)



## தவக்கால நற்சிந்தனை

'நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப் படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதீர்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளிக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

[மத்தேயு-7:12]

கம் குற்றம் அறியார் பிறர் குற்றம் காண்பார் என்பது பழமொழி. தன்னை ஒருமேதாவி என்று கருதிக் கொண்டு மற்றவர்களைப் பேதைகளாக எண்ணுவது இன்றைய உலக வாழ்க்கையில் நீக்கமற நிறைந்திருக்கும் உண்மை அந்த எண்ணத்தையே ஆரம்பமும், முடிவுமாக எண்ணிப் பல குற்றங்களைத் தெரிந்தே செய்கிருேம்.

பலபெரியமனிதர்கள் என்று சொல்லக் கூடியவர்களையும் நாம் பார்த்திருக்கின்ருேம். அவர்கள் தெரிந்து செய்யும் குற்றங்கள் அல்லது வேண்டுமென்றே செய்யும் குற்றங்கள் கூட பெரிய மனிதர் என்ற பட்டத்தின் போர்வையின் உள்ளும், மிகப் படித்தவர் என்ற பட்டத்தின் வாயிலாகவும், செல்வர் என்ற பெயரின் மறைவிலேயும் மறைந்து விடுகின்றனவென்பதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிருேம். அப்படிச் செய்யப்படும் குற்றங்கள் குறைகள் எல்லாவற்றையும் மூடிமறைப்பதற்கென்றே ஒரு சில கைக்கூலிகளும் வாழ்ந்து வருகின்ற சனங்களையும் நாம் பார்த்து வருகிருேம்.

நாம் மற்றவர்களுக்கு என்ன செய்கிருேமோ அதுவே நமக்கு மீண்டும் அளிக்கப்படும். கடலையை விதைத்து விட்டுக் கரும்பை எதிர் பார்க்க முடியுமா? நம்மை நாமே திருத்திக் கொண்டல்லாது மற்றவர்களை எந்த விதத்திலும் கட்டுப் படுத்த நமக்கு அருகதை இல்லை.

—ஞானஒளி

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
**பட்டிக்காட்டு ராஜா**

## ஈழகேசரி பொன்னையா நினைவுவிழா

தெல்லிப்பழை, புதன்

'ஈழகேசரி' பொன்னையாவின் 26ம் ஆண்டு நினைவுவிழா ஏப்ரல்மாதம் 4-ம் தேதிமாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

சன்மார்க்க சபைத்தலைவர் கலைப்பேராசு ஏ.ரி.பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், திரு. பொன்னையாவின் பிரதிமைப் படத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.க.மகாதேவன் மாலைசூட்டுவார்.

நாட்டார் இலக்கியமும் நற்றமிழ் இலக்கியமும்' என்பது பற்றி, ஆசிரியர் திரு.சி. மௌனகுரு 'ஈழத்தில் இலக்கிய வளர்ச்சியும் பத்திரிகைகளும்' பற்றி திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் உட்படபலர் உரையாற்றுவர்.

அல்வாய் மனோகரா நாடக மன்றத்தினரின் சிந்துநடைக் கூத்து (காத்தவராயன்) மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (அ)

......

## நிர்வாகிகள்

கல்வியங்காடு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டுறவு ஊழியர் சங்க நடப்பு வருட நிர்வாகிகள்தெரிவு திரு. நா.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாக சபையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-திரு. கு. சின்னத்தம்பி உபதலைவர்:-திரு.பா. பசுபதி. காரியதரிசி:-திரு.நா. இராசு. உபகாரியதரிசி:-திரு. அ.அருள்நாயகம் தனாதிகாரி;- திரு. க. அம்பிகைபாலன் உபதனாதிகாரி:-செல்வி.நா. கனலட்சுமிமற்றும் 9பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

......

## த. வி. கூ. கிளை

கரம்பன், புதன்

கரம்பன் தெற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- எஸ். பஸ்தியாம் பிள்ளை, துணைத் தலைவர்- கே. நடராசா, செயலாளர் என். சாள்ஸ் பத்திநாதன், துணைச் செயலாளர்- எஸ். மருதையினர், பொருளாளர்- திருமதி அல்பிரட் சிசிலியா மற்றும் 6 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. [உ]

## மூதறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பக்திப்பாடல்களையே ஒலிபரப்பும்.

### பொங்கல் பிரார்த்தனை

தந்தை செல்வாவின் உடல் நலம் வேண்டியும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அவரின் நீண்ட சேவையை எதிர் நோக்கியும் 80-வது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டும் கோண்டாவில் கிழக்கு சந்தியில் எழுந்தருளியிருக்கும் அற்புதநர்த்தன விநாயகருக்கு இன்று கோண்டாவில் தமிழர் விடுதலைக்கூட்டணி பொங்கல் எடுத்துப் பிரார்த்தனை செய்கிறது.

### மாவைக் கந்தனுக்கு விசேஷ அபிஷேகம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்ல் இன்று காலைவிசேஷ அபிஷேகமும்,பூஜையும் நடைபெறவிருக்கின்றன. நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

### தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை புளியடி வயிரவர் கோவிலில் இன்று பிற்பகல் பொங்கலும், பூஜையும், தலைவரின் நலம் வேண்டி பிரார்த்தனையும் நடைபெறும்.

### நல்லூரில்,

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதினத்தில் பகல் 12 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நல்லூர் கயிலாயபிள்ளையார் கோவில், திருநெல்வேலி சிவன்கோவில், முத்துமாரி அம்மன் கோவில், பரமேஸ்வராச்சந்திப் பிள்ளையார், பழம்ரோட்டுப் பிள்ளையார், வீரமாகாளி அம்மன், நல்லூர் சிவன் கோவில், வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயம் முதலிய ஆலயங்களில் பகல் 12 மணிக்கு விசேஷ ஆராதனைகள்இடம்பெறுகிறது

இன்று பிற்பகல் 6 மணிக்கு மேல்நல்லை ஆதீனத்தில் கூட்டுப்பிரார்த்தனை, பக்திப்பாடல்களுடன் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகளின் சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும்.

### இமைகளை அசைக்கிருர்

மூதறிஞர் செல்வாவின் உடல்நிலையில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் உடலில் சிறுஅசைவுகள் இருப்பதாகவும் ஆஸ்பத்திரிவட்டாரத்தில் நேற்றுத்தெரிவிக்கப்பட்டது. (அ)

## திருட்டு

ஹொரண, புதன்

மிருகக்காட்சிச்சாலைக்குத் தமது குடும்பத்தாருடன் சென்றுவிட்டு வீடு திரும்பிய ஒரு குடுமபத் தலைவருக்கு வீட்டில் பேரதிர்ச்சிகாத்திருந்தது.

ஹொரணையைச் சேர்ந்த சோமசிறி பெரேரா என்ற இக் குடும்பத் தலைவர் தமது குடும்பதகாருடன் சம்பவ தினத்தன்று தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது வீடு உடைக்கப்பட்டு பதினைலாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் திருட்டுப்போயிருந்தனவாம்.

• • •

## சந்நிதியில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. திரு. செ. விசாகரத்தினஐயர் தலைமையில் சங்காபிஷேகம் நிறைவேற்றப்படும். விசேஷ மேளக்கச்சேரி நடைபெற்று திருஉலா நிகழும். (அ)

ஈழநாடு
The EELANADU

## ராஜ்யசபை துணைத்தலைவர்

புதுடில்லி, மார்ச்30

ராஜ்ய சபையின் துணைத் தலைவராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராம்தம் மிர்தா இன்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மதுரையில் உலகமத மகாநாடு ஆரம்பம்

### ஏழு நாட்கள் நடைபெறும்

மதுரை, மார்ச் 30

உலகின் பலநாட்டு மதத் தலைவர்களும், மத அறிஞர்களும் கலந்துகொள்ளும் உலக மத மாநாடு ஒன்று இன்று மதுரையில் ஆரம்பமாகியது.

பாரதம், இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா உட்பட பல நாடுகளினதும் மத அறிஞர்களும், மதத்தலைவர்களும் தத்தம் மத அடிப்படைத் தத்துவங்கள், உரிமைகள் பற்றி இம்மாநாட்டில் பேசுவர்.

ஏழு நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம் மாநாட்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரும் கலந்து கொள்ளவிருக்கிறார். நேபாள மன்னர் பிரேந்திரா மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். (உ)

# தமிழரசு வாலிபர்கள் இணைந்த பின் காங்கிரஸ் வாலிபர்கள் ஏன் இப்படி?

## மேலிடம் கவனத்தில் எடுக்கவேண்டும் என்கிறார் வண்ணை ஆனந்தன்

யாழ்ப்பாணம், வியா.

தமிழ் இளைஞர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியைப்புதுப்பித்தல், உயிரூட்டல் போன்ற பத்திரிகைச்செய்திகள் தமிழ் ஈழம்காணப்புறப்பட்ட இளைஞர்களின் நெஞ்சில் வேதனையைத் தோற்றுவித்திருப்பதாகசிறைமீண்ட இளைஞர் வண்ணை ஆனந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்க்காங்கிரஸ் மேலிடம் இதுபற்றிச் சிந்திக்கவேண்டுமென்றும் அவர் தமதுஅறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

வண்ணை ஆனந்தன் விடுத்த அறிக்கைவிபரம்வருமாறு:

'வாழ்வை, வசதிகளைத் துறந்து தமது அழிவில் தமிழ் ஈழத்தைக்காண வாலிபர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள், பட்டம், பதவி என எதையுமே அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையில் முழு சிங்கள ஏகாதிபத்திய முகத்திரில் கொள்ளத்தக்க வகையில்தமிழ் இளைஞர் பேரவை ஒருகட்டுக்கோப்பான வலுவான இயக்கமாக உருவாகி வருகின்றது. தமிழரசு வாலிபர்கள் தமது வாலிபஅமைப்பை முற்றுகவே கலைத்து இளைஞர்பேரவையுள் சங்கமமாகியுள்ளனர். அந்த இளைஞர்களை முழு உழைப்பும் தமிழ் இளைஞர் பேரவையை வலிவுகொள்ளத்தக்க அமைப்பாக்கி வருகின்றது. இங்கே சாதி, சமயவேறுபாடு கிடையாது. நாம் தமிழர். எம்இலட்சியம் தமிழ்ஈழம் இதுவே இளைஞரது தாரகமந்திரமாகிவிட்டது.

'இவ்வேளையில் தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணியை புதுப்பித்தல், உயிரூட்டல் என்ற செய்திகள் இன்று பத்திரிகைகளில் வருவது தன்னை அழித்து தமிழ்ஈழம் காணப் புறப்பட்ட இளைஞர்களது நெஞ்சில் இனம்புரியாத வேதனையைத் தோற்றுவித்திருக்கின்றது.

'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மேலிடம் இதைக் கவனத்தில்கொள்ளவேண்டும். தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்கள் இதை இருதய சுத்தியுடன் சிந்திக்கவேண்டும். ஆகவே அவர்களை இந்தக் கட்சிமனப்பான்மையை நீக்கி தமிழ் இளைஞர் பேரவையைப் பலப்படுத்த உழைக்குமாறு அறைகூவல் விடுகின்றேன். [அ]

## சாகும்வரை தலைவர் எனத் தெரியாதவர்

### அமரர் உமாபதிசிவத்துக்கு கவிஞர் காசி அஞ்சலி

யாழ்ப்பாணம், வியா.

"தொண்டருக்குத் தொண்டராக இருந்து தலைவராக வாழும் சிலர் சாகும்வரை தலைவராக வாழ்ந்தது தெரியாமலே கடமையைச்செய்துவிட்டுப் போகிறார்கள். அப்படியொரு தலைவர்தான் அமரர் உமாபதி சிவம்'' என்று இளைஞர்பேரவைத் தலைவர் கவிஞர் காசிஆனந்தன் கருகம்பனையில் நேற்றுமுன் தினம் நடந்த அமரர் உமாபதி சிவத்தின் அந்தியேட்டி வைபவத்தில் அஞ்சலிசெலுத்திப் பேசுகையில் குறிப்பிட்டார்.

''எளிமையான வாழ்க்கை வாழ்ந்த அமரர் உமாபதி சிவம் தமது வீட்டில் என்னதான் கஷ்டங்கள் இருந்த போதிலும் பிறரின் துயர் தீர்ப்பதற்கு முன்னின்று உழைத்த பெருமகன்'' என்று கவிஞர் காசி மேலும் சொன்னார்.

வீதியிலோ வேறு எந்த இடத்திலோ அமரர் உமாபதி சிவம் இருந்தாலும் அந்த இடம் கூட்டணி அலுவலகமாகவே விளங்கும் என்றும் தொண்டருக்குத் தொண்டராக இருந்ததால் அவர் தலைவராக விளங்கினார் என்றும் கவிஞர் காசிஆனந்தன் மேலும் கூறினார்.

தாம் முதல்தடவை சிறை வைக்கப்பட்டபோது தன்னைப் பார்ப்பதற்காக உமாபதி சிவம் சிறைச்சாலைக்கு வந்து சிறைஅதிகாரியுடன் தர்க்கமிட்டு கடைசியில் தந்தை மட்டுமே மகனைப் பார்க்க அனுமதிக்கமுடியும் என்று கூறியதும் தமதுஉடல் நலனைக் கவனியாது மட்டக்களப்புக்குச் சென்று தந்தையாரைஅழைத்துவந்து சந்திக்க வைத்தாரென்றும் கவிஞர் காசி எடுத்துக்கூறினார்.

இவ் வைபவத்தில்மூதறிஞர் செல்வநாயகம் விரைவில் பூரணகுணமடைய வேண்டுமென இரண்டு நிமிடம் மௌனப்பிரார்த்தனை நடைபெற்றது.

திரு. எம். ஆலாலசுந்தரம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், மாவை சேனாதிராசா உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## "கைத்தறி ஊழியரை நிரந்தரமாக்குங்கள்"

### கூ.ஊ-சங்கப் கோரிக்கை

கல்வியங்காடு, புதன்

''சங்கானை ப, நோ. கூ. சங்க கைத்தறி ஊழியர்கள் அனைவரும் தம் பதவிகளில் நிரந்தரமாக்கப்படவேண்டும்'' என்று கோரும் தீர்மானம் ஒன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டுறவு ஊழியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் திரு. சின்னத்தம்பியின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பணிப்பாளர் சபை பணியாளர்களை பழிவாங்கக்கூடாது, மின்தறியாலையில் நடு நிசி வேலை உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். தற்போது பணிபுரியும் ஊழியர்கள் எவரையும் தக்க காரணமின்றி வேலைநீக்கமோ, வேலைமாற்றமோ செய்யக்கூடாது என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் புதிய நிர்வாகத்திடம் கையளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. (உ)

## இந்த நிதியுதவி விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,வியா.

கடந்தமாதம் 1-ம் திகதி யாழ். பஸ் நிலையத்தில் நடைபேற்ற தாக்குதல் சம்பவத்தில் சேதத்துக்குள்ளான கார்கள் டாக்ஸிகளின் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தமிழ் இளைஞர் பேரவையினரால் சேகரிக்கப்பட்ட பணம் மூதறிஞர் செல்வா சுகவீனமுற்றதின் காரணமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவது பின்போடப்பட்டுள்ளது.

இந்தப்பணம் விரைவில் பகிரங்க நிகழ்ச்சியொன்றின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுமென்று தெரிகின்றது.

இதே சமயம் டாக்ஸி சாரதிகள் சங்கம் ஒன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

## பரந்தனில் சலவைச் சோடா உற்பத்தி அதிகரிக்கப்படும்

கொழும்பு. புதன்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் சலவைச் சோடா உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படவிருக்கிறது.

தற்போது இத்தொழிற்சாலையில் மாதாந்தம் 125 தொன் சலவைச்சோடா உற்பத்திசெய்யப்படுகிறது. சவர்க்கார உற்பத்திக்கு மூலப்பொருவாக சலவைச்சோடா பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எம்பிலிப்பிட்டிய கடதாசி உற்பத்தித் தொழிற்சாலைத் தேவைகளின்பொருட்டே சலவைச்சோடா உற்பத்தி அதிகரிக்கப்படவிருக்கிறது.

குளோரின் உற்பத்தியும் இங்கு அதிகரிக்கப்படவிருக்கிறது. (உ)

## பண்டிதர் தந்தி

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழர் தாமே எதுவும் செய்துவிட்டுப் போகட்டும் என்று வாளாவிருந்து விடாது இப்பிரச்னையில் உடன் தலையிட்டுத் தீர்வுகாணுங்கள்'' என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். சித்த ஆயுர்வேதக் கல்லூரியினரின் சத்தியாக்கிரகம் குறித்து பிரதமர், சுகாதார அமைச்சர், சுகாதாரப் பிரதியமைச்சர், அமைச்சின் செயலாளர், ஆயுர்வேத ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள அவசரத் தந்தி ஒன்றில் கூறியுள்ளார்.

## காசி மட்டுநகர் விரைந்தார்

யாழ்ப்பாணம், வியா.

காசி ஆனந்தன் நேற்று மட்டக்களப்புத்திரும்பினார். சுகவீனமுற்றிருந்த போதிலும், மட்டக்களப்பில் அவசர அலுவல் காரணமாக இவர்நேற்று அங்கு விரைந்ததாகக் கூறப்பட்டது. (ஆ)

## நியமனம்

கொழும்பு.வியா.

கொழும்பு அதிமேற்றிராணியாராக அதி. வணக்கத்துக்குரிய மார்க்கஸ் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். (ஆ)

## குறிஞ்சிக் குமரன் விக்கிரக ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியா

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக குறிஞ்சிக் குமரன் கோவில்திருத்தமண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் நடேசர், சிவகாமியம்மன் மணிவாசகர் திருமேனிகள் நேற்று யாழ் நகரில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது பூரண கும்பம் வைத்து வரவேற்று பல இடங்களிலும் காணிக்கை செலுத்தப்பட்டது. (ஆ)

## இந்தத தேவாலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,வியா.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் உடல் நலத்திற்காக நாளை மேற்றிராசன மாதா கோவில், குருநகர் சந்தியோகுமையோர் கோவில், பாஷையூர் புனித அந்தோனியார் கோவில், கொழும்புத்துறை அர். சூசையப்பர் கோவில், பாண்டியன்தாழ்வு சாந்தனார் கோவில் நாவாந்துறை சந்தாருஸ் கோவில், யாழ். ஆஸ்பத்திரி ஆரோக்கிய மாதா கோவில் நாவாந்துறை பரலோகமாதா கோவில் குருநகர் உத்தரிய மாதா கோவில், சுண்டிக்குளி அர்ச் சுவானியா கோவில் ஆகியவற்றில் விசேஷ வழிபாடு நடைபெறவுள்ளது. (ஆ)

## ரூபா 14 ஆயிரம் கொள்ளை

கரவனெல்ல, புதன்

தோட்ட சுப்பிரின்டன்ட் ஒருவரது அலுவலகம் உடைக்கப்பட்டு 14,175 ரூபா ரொக்கப்பணம்திருட்டுபோயுள்ளது. கரவனெல்ல பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

## ரயில்சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை நிறுத்தம் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுவிட்டதாகவும் வழமைபோல் சேவைகள் நடைபெறுமென்றும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்டையில் இருந்து புறப்பட்ட யாழ்தேவி நேற்று வழமையான நேரத்துக்கு யாழ் ரயில் நிலையத்தை வந்தடைந்தது. (உ)

## யாழ். மாவட்டத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கிறோம்.

வழமையான வியாபாரிகளுக்கும் உண்மையான பாவனையாளர்களுக்கும் சிகரெட் கிடைப்பதற்கு நாம் நம்மால் இயன்றவரை நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

### தேர்தல் நடந்த முறை

## பாக்.மதிப்பை குறைத்தது; பாரதம் மதிப்பை கூட்டியது

### பாக்.எதிர்க்கட்சித் தலைவர்

இஸ்லாமாபாத், மார்ச் 30

''பாரதத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் அந் நாட்டின் தேசிய கௌரவத்தைக் காப்பாற்றிவிட்டது. ஆனல் இந்தவகையில் பாகிஸ்தான் தேர்தல் நடாத்தப்படவில்லை'' என்று பாகிஸ்தான் எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜனுப் ஈசுருல்லகான் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாரத தேர்தல் முடிவு குறித்து அவர் மேலும் கூறுகையில், பயமுறுத்தல்மூலம் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்கிவிட நினைக்கிறார்.

பாராளுமன்றத்தைக் கலைத்து அவர் புதிய தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கும் வரை அவருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடாத்த நாம் தயாராக இல்லை. பாரத பொதுத் தேர்தல்மூலம் அந் நாட்டின் நன்மதிப்பு உயர்ந்துள்ளது. நம்நாட்டில் தேர்தல் நடாத்தப்பட்ட முறையால் நாட்டின் நன்மதிப்பு குறைந்துவிட்டது என்றார். (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.